Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-07 | 22-11-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-278

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும் விரைவாகவும் பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பி
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

## - தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் -

# வன்னிப்பகுதியில் பெரு வெள்ளம்; குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம்!

### பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் வெளியேற்றம்

[அலுவலக செய்தியாளர்]

**வன்னிப்பிரதேசத்தில் கடந்த இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்துவரும் கன மழைகாரணமாகப் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன் பல குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயமும் தோன்றியுள்ளது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளதோடு பெருமளவு மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.**

கிளிநொச்சிக் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்து மேலதிக நீர் ஏந்தடிவான் எனப்படும் பகுதியூடாக தொடர்ச்சியாக வெளியேறிக்கொண்டிருக்கிறது. இப்படியிருந்தும் அதிகளவான நீர் குளத்தை வந்தடைந்ததால் குளத்தின் மண் அணையை (பண்ட்) மேவிப்பாயும் அளவுக்கு நிறைந்துவிட்டது. இதனால் மேலதிக நீரை வெளியேற்றும் கதவு இரவு 7.30 மணியளவில் திறந்துவிடப்பட்டது.

இவ்வாறு திறந்து விடப்பட்டபோதும் குளத்தின் நீர் மட்டம் இரவு 12.00 மணிவரை குறைவடையவில்லை. குளம் உடைப்பெடுக்கும் அபாய கட்டத்தில் இருப்பதால் பரவிப்பாஞ்சான் கிராம மக்கள் வெளியேற

(12ஆம் பக்கம் பார்க்க)



படம்:- சோதி

## குடாநாட்டிலும் வீடுகளுக்குள் வெள்ளம்
## 31கி. சேவகர் பிரிவில் மக்கள் இடம்பெயர்வு

யாழ். குடாநாட்டில் பெய்துவரும் கனமழை காரணமாக இங்குள்ள 31கிராம சேவையாளர் பிரிவுகள் மிக மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச செயலகம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் வடமராட்சி வடக்கில் 18கிராமசேவையாளர் பிரிவுகளிலும் வடமராட்சி கிழக்கில் 11கிராம சேவையாளர் பிரிவுகளும்.வலிகாமத்தில் இரண்டு கிராமசேவையாளர் பிரிவுகளும் மழையினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறியுள்ள மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கூறினார்.

இதேவேளை தொடர்ந்து பெய்துவரும் கனமழை, வேகக்காற்று என்பவற்றால் குடாநாட்டில் இயல்புநிலை மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.யாழ். குடாநாட்டில் பெய்துவரும் மழை காரணமாக சுனாமியால் பாதிக்கப்பட்டு வடமராட்சி கிழக்கிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவரும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தம் குடியிருப்புக்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளன. (33,கா)

## ரட்ணசிறி விக்கிரமநாயக்க புதிய பிரதமராகப் பதவி ஏற்பு!

### சுதந்திரக்கட்சி சிரேஷ்ட அங்கத்தவர்கள் அதிருப்தி



சிறிலங்காவின் 14ஆவது பிரதமராக சிங்களக் கடும்போக்காளர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க நேற்று திங்கட்கிழமை பதவியேற்றார். அலரிமாளிகையில் நேற்றுக்காலை 11.39 மணிக்கு பதவிப்பிரமாண வைபவம் இடம்பெற்றது.

மகிந்தராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகவும், புத்தசாசன அமைச்சராகவும் பதவி வகித்தவர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

தாம் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் கடற்படைச்சிப்பாயைக் காணவில்லை
## ஊரடங்கு அறிவித்து வீடு வீடாகப் படையினர் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகம் நெடுந்தீவில் காணாமற்போன கடற்படைச்சிப்பாயை மீட்பதாகக் கூறி பாரிய தேடுதல் நடவடிக்கையை சிறிலங்கா கடற்படை, பொலிசாருடன் இணைந்து நடத்தி வருகின்றனர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையில் பத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை முதல் நெடுந்தீவுக்கு நான்கு முறை உலங்குவானூர்திகளில் பெருமளவில் சிறிலங்கா கடற்படையினர் இறக்கப்பட்டு இத்தேடுதல் நடத்தப்பட்டு வருகிறது.

சிறிலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் இரவு காணாமற்போயுள்ளார். இவர் கடத்தப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இந்தக் கடற்படைச்சிப்பாயைத் தேடுவதாக சிறிலங்கா கடற்படையினரும் பொலிசாரும் நெடுந்தீவில் சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தி வருகின்றனர். ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டே நேற்று இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது வீடுகளில் இருந்த இளைஞர்கள் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு பிரதான வீதியில் மகாவித்தியாலயத்திலிருந்து மருத்துவமனை வரையான பகுதிகளுக்கான போக்குவரத்து மூடப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் கடற்படை அராஜகம்; ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவில் அப்பாவிப்பொதுமக்களைக் கடற்படையினர் மிலேச்சத்தனமாகத்தாக்கியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை நெடுந்தீவு கடற்படைமுகாமைச்சேர்ந்த கடற்படைச்சிப்பாய் காணாமல் போனதைத் தொடர்ந்து நெடுந்தீவுப் பகுதியில் மாறி மாறி கடற்படையினரும் பொலிசாரும் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு பத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கைதுசெய்துள்ளது மட்டுமன்றி

(12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நாள் நவம்பர் - 27

"மாவீரர்களே! உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகின்றது; உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகின்றது."

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.

## புதிய அமைச்சரவை இன்று பதவி ஏற்கும்!

### - ஜே.வி.பி.புறக்கணிக்கும்?

சிறிலங்காவின் புதிய அமைச்சரவை இன்று செவ்வாய்க்கிழமை பதவியேற்க உள்ளது. புதிய அமைச்சரவை பதவியேற்பை ஜே.வி.பி புறக்கணிக்கும் என்று அக்கட்சியின் முன்னாள் கலாச்சார அமைச்சர் விஜித ஹேரத் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக விஜித ஹேரத் கூறியுள்ளதாவது;

சிறிலங்காவில் புதிய அரசியல் சூழல் உருவாகியுள்ளது. பாராளுமன்றத்தில் சுயாதீனமான எதிர்க்கட்சியாக செயற்படும் நிலைப்பாட்டில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு கடற்பகுதி கொந்தளிப்பாக இருக்கும்

(கொழும்பு)

தற்போது பெய்துவரும் அடைமழைக்கு காரணமாக தென்மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட காற்றழுத்த தாழமுக்கம் வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து செல்வதாக சிறிலங்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பெய்துவரும் கடும் மழையினால் பாதிக்கப்பட்ட சில இடங்கள்



பரந்தனில்





றெட்பானாவில்





மூங்கிலாற்றில்



தருமபுரத்தில்



உமையாள்புரத்தில்





இரணைப்பாலை - மாத்தளன் வீதியில்

படங்கள்:- லோகீசன், பிரதீபன், தவரட்ணம்

## வெள்ளத்தினை அகற்றும் பணிகளில் கரைச்சிப் பிரதேச சபையினர்

(அலுவலக செய்தியாளர்)

வீதிகளில் தேக்கம் கண்டுள்ள பகுதிகளில் வெள்ளத்தினை அகற்றும் பணிகளில் கரைச்சி பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றைய தினம் கிளிநொச்சி நகரப்பகுதியில் தேக்கம் கண்டுள்ள வெள்ளநீர் பகுதிகளில் இயந்திரத்தின் துணையுடன் வாய்க்கால்கள் வெட்டப்பட்டு தற்காலிகமாக நீர் போக்கிகள் பொருத்தப்பட்டதுடன் வெள்ள நீர்களை அகற்றும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டதனைக் காணக்கூடியதாகவிருந்தது. கரைச்சிப்பிரதேச விசேட ஆணையர் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்கள எந்திரிஆகியோர் முன்னிலையில் பிரதேசசபை ஊழியர்களால் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வெள்ளநிவாரணப்பணிகளில் த.பு.க.வின் 300 தொண்டர்கள்

தற்போது பெய்துவரும் பெருமழை காரணமாக வெள்ளத்தில் சிக்குண்டு தவிக்கும் மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் வெள்ள நிவாரணத்தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேற்படி பணிக்கென 300தொண்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் சகல பகுதியிலும் வெள்ளம் பாயும் வீதிகளில் மக்களைக் கரைசேர்க்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.இவர்களின் பணிக்கென தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் உழவு இயந்திரங்களும் சேவையிலீடுபடுத்தப்பட்டு வெள்ளம் பாயும் பகுதிகளில் மக்கள் மற்றும் உடமைகளைக் கரைசேர்க்கும் பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. .(சோ)

## முக்கிய அறிவித்தல்

### நூல் அறிமுகவிழா இடைநிறுத்தம்

2005.11.23 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக் கலையரங்கில், முனைவர் கு.அரசேந்திரன் அவர்களின் "தமிழ்க்கப்பல், தமிழறிவோம்" ஆகிய நூல்களின் அறிமுக விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தோம். கடும் மழையால் இந்நிகழ்வை இடைநிறுத்தியுள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

(6431) ஏற்பாட்டுக்குழு

## வரிவிளம்பரம்

### மாவீரர் படங்கள்

மூத்த மாவீரர்கள், முதன்மை மாவீரர் படங்கள் எம்மிடம் உண்டு. தொகுதி 30/= தொடர்பிற்கு அறிவமுது பொத்தகசாலை. (6937)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

இணையத் தளங்களை உருவாக்கக் கூடிய உயர்கற்கை நெறி **FlashMX**, வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகட்கு: வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி.13074)

ரூபா 5/- மட்டும் ஐந்து மணிக்கு ஐந்து ரூபாவுக்கு விரைவில்... (சி.13360)

## மழைகாரணமாக குடாநாட்டில் விவசாயச்செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் பலத்த மழை காரணமாக குடாநாட்டில் விவசாயச் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். தற்போது தொடர்ச்சியாக பெய்துவருகின்ற மழைகாரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இதனால் விவசாயிகளால் செய்கை மேற்கொள்ளப்பட்ட பயிர்கள் பல அழிவடைந்துள்ளதுடன் சில பயிர்கள் அழிவடையும் நிலையையும் அடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மழைவெள்ளம் காரணமாக நெற்பயிர்களும் அழிவடையும் நிலையை அடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பலத்த காற்றுக் காரணமாக வாழைச்செய்கையும் பாதிப்படைந்துள்ளது. வெங்காயம், கிழக்குவகைகள் என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக புத்தூர், நீர்வேலி, உரும்பிராய், அச்சுவேலி,கோப்பாய் போன்ற இடங்களில் அதிகளவில் பதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வடமராட்சி கிழக்கில் பல்மருத்துவ முகாம்

நேற்று வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பாடசாலையில் தமிழீழ சுகாதார சேவையினரால் பல் சம்பந்தமான மருத்துவசேவை நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் இடம்பெற்றது.

## சாவு அறிவித்தல்

### முருகேசு கதிராசிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைப்பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம் இல 170ஐ நிரந்தர வதிவிடமாகவும்கொண்ட முருகேசு கதிராசிப்பிள்ளை 20.11.2005 அன்று காலமானார். அன்னார் அமரர் முருகேசுவின் அன்பு மனைவியும், சுகுணேச மூர்த்தி (கனடா), நாகேஸ்வரி(துங்கம் ஸ்கந்தபுரம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகரத்தினம், கமலேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், மயூரன், பேரானந்தருபன், பிரதீபன், சர்மிளா ஆகியோரின் பேர்த்தியும், மருதையினாரின் பாசமிகு அக்காவுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.11.2005 புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஸ்கந்தபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:-

(6942) ப.யோகன் (மருமகன்)

# மத்திய அமெரிக்காவில் காமா சூறாவளி; மழை; 12 பேர் பலி; பலரைக்காணவில்லை

[வோஷிங்டன்]

**மத்திய அமெரிக்காவில் "காமா" சூறாவளி மற்றும் மழை காரணமாக 12 பேர் பலியாகியுள்ளனர். பலா காணாமல் போயுள ளனர்.**

கடந்த ஒக்ரோபர் மாதம் மத்திய அமெரிக்க நாடுகளில் வீசிய சூறாவளிக்கு இலக்காகி இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மீண்டும் நேற்று முன்தினம் காமா என்ற புதிய சூறாவளி மத்திய அமெரிக்க நாடுகளைத் தாக்கியது. இதன் காரணமாக கரீபியன் கடலோரப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்தச்சூறாவளி மழையால் ஹாண்ட்டுராஸ் பகுதி பெரும் சேதத்திற்குள்ளானது. இங்கு நான்கு பேர் பலியாகினர். மேலும் ஏராளமானோரின் நிலைகுறித்த தகவல்கள் வெளிவரவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்புக் குழுவினர் சென்ற படகு ஆற்றில் கவிழ்ந்துள்ளது. பல கிராமங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

இதில் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. பெரிய பாலம் ஒன்றும் இடிந்து விழுந்துள்ளது. மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதால் பலர் வீட்டுக்கூரை மீது அமர்ந்துள்ளனர்.

இந்தச் சூறாவளி கியூபா, நிகரகுவா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளைத்தாக்கலாம் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது.

இதேவேளை பிரேசில் நாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள கமோலா என்ற இடத்தில் மோசமான வானிலை காரணமாக குட்டி விமானம் விழுந்து நொருங்கியது. இதில் விமானி உட்பட அதில் பயணம் செய்த மூன்று பேர் பலியானார்கள்.



ஹாண்டுராஸ் கடற்கரையில் "காமா" சூறாவளி மையம் கொண்டுள்ளது. இதனால் அந்த நாட்டின் சான்பெட்ரோ சூலா நகரில் கனமழை பெய்து வருகிறது. வெள்ளத்தில் சிரமப்பட்டு நடந்து செல்லும் மக்கள்.

# அவுஸ்திரேலியாவின் கடல்பகுதியில் நிலநடுக்கம்

(கான்பரா)

அவுஸ்திரேலியாவின் பண்டா கடல் பகுதியில் நேற்றுக்காலை திடீரென்று நிலநடுக்கம் ஏற்பட்டது. டார்வின் நகரில் இருந்து 500 கிலோ மீற்றர் வடமேற்கில் இந்த நிலநடுக்கம் உருவானது. ரிச்டர் அளவில் இது 5.3 புள்ளிகள் பதிவானது.

ஆசியாக் கண்டத்திலும் அவுஸ்திரேலியக் கண்டத்திலும் உள்ள புவித்தட்டுக்கள் நகர்ந்து ஒன்றுக்கொன்று மோதியதால் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக பூகம்பவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நடுக்கத்தால் சுனாமிப்பேரலைகள் எதுவும் ஏற்படவில்லை. ஆனாலும் கடலோரப்பகுதிகளில் உஷார் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



உலகிலேயே மிகப்பெரிய சொகுசுக்கப்பல் இதுதான். 2003 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 'ராணிமேரி-2" என்ற இந்த இங்கிலாந்து சொகுசுக் கப்பல் உலக சுற்றுப் பயணத்துக்கு இடையே ஜேர்மனியின் ஹாம்பர்க் நகரில் உள்ள துறைமுகத்தில் இப்போது பராமரிப்புக்காக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தப்பராமரிப்புப் பணியின் போது கப்பலுக்கு வர்ணம் பூச 50 தொன் வர்ணம் தேவைப்பட்டது.

# சர்வதேச அணுசக்தி நிறுவனத்துடன் அணுசக்தி விவகாரத்தில் ஒத்துழைப்பதில்லை

-ஈரான் பாராளுமன்றத்தில் தீர்மானம்

அணுசக்தி விவகாரத்தில் சர்வதேச அணுசக்தி நிறுவனத்துடன் ஒத்துழைப்பதில்லை என்ற யோசனைக்கு ஈரான் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வெளியிட்டுள்ளனர். இந்த யோசனை மீது ஈரான் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது அந்த யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த 197 உறுப்பினர்களில் 183 பேர் இந்த யோசனைக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்துள்ளனர்.

இதனை 12 பேர் கொண்ட பாதுகாப்புப்பேரவை அங்கீகரிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. ஈரானில் அணுத்திட்ட விவகாரம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவைக்குக் கொண்டுசெல்லப்பட்டால் குறுகிய கால முன்னறிவிப்புடன் அணுசக்தி நிலையங்களில் சர்வதேச அணுசக்தி நிறுவன அதிகாரிகள் சோதனை நடத்துவதை அனுமதிக்கவில்லை எனவும் ஈரான் பாராளுமன்றம் தீர்மானித்துள்ளது.

ஈரானின் அணுத்திட்டப்பிரச்சினையைப் பாதுகாப்புப் பேரவைக்குக் கொண்டுசென்று அதன்மூலம் ஈரான் மீது பொருளாதாரத்தடைகளை விதிப்பதற்கு வழி இருக்கின்றதா என்பது குறித்து சர்வதேச அணுசக்தி நிறுவனம் இந்தவாரம் வியட்நாமில் கூடி தீர்மானிக்கவுள்ளது.

# நான்கு பசுபிக் தீவுகள் பிரச்சினைக்கு தீர்வுகாண ரஷ்யாவும் ஜப்பானும் இணக்கம்

(டோக்கியோ)

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் பலப்படுத்தப்படும் அதே சமயம் 60 வருடகாலமாக இருந்து வரும் நான்கு பசுபிக் தீவுகள் சம்பந்தமான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என்று ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டினும், ஜப்பானியப் பிரதம மந்திரி யுனிச்சுரே கொய்சுமியும் உடன்பட்டுள்ளனர்.

பசுபிக்தீவுகள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண முடியாவிட்டாலும் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் ஏற்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதை இருநாட்டுத்தலைவர்களும் பேச்சின் போது நினைவு கூர்ந்தனர்.

பாதுகாப்பு சம்பந்தமாக அமைச்சர்கள் மட்டப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற உடன்பாடும் காணப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் உட்பட பல முக்கிய ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

ரஷ்ய சனாதிபதி கருத்து வெளியிடுகையில்; இரு நாடுகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் இல்லாத காரணத்தினால் வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன என்றும் கூறினார்.

ஜப்பானின் வடக்கு எல்லையிலும், ரஷ்யாவின் ஆதிக்கத்திலுள்ள நான்கு பசுபிக் தீவுகள் சம்பந்தமான பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படாததனால் இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தம் இதுவரை கைச்சாத்திடப்படவில்லை.



டுபாயில் நடக்கும் விமானக் கண்காட்சியைப் பார்வையிடுறார் ஒருவர்.

# இஸ்ரேலில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்த ஏற்பாடு

இஸ்ரேலில் பாராளுமன்றத்தைக் கலைத்து இயன்றளவு விரைவில் பொதுத்தேர்தலை நடத்துமாறு பிரதமமந்திரி ஏரியல்சரோன் இஸ்ரேல் சனாதிபதி மோசோ ஹட்சோவைக் கேட்டுள்ளார்.

தான் முன்னின்று நடத்தி செப்ரெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்ட காஸா முனையில் இருந்து இஸ்ரேலியர்கள் திரும்பப்பெறும் நடவடிக்கைக்கு ஏரியல் சரோனின் வலதுசாரி லிக்குவிட் கட்சி அங்கத்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தபோதிலும், பொதுத்தேர்தல் சம்பந்தமாக அவர் மேற்கொண்ட இந்தத் தீர்மானத்தின் மூலம் இஸ்ரேலின் எதிர்கால அரசியல் புனரமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தமது தலைமையில் அமைக்கப்படும் புதிய கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு அவர் ஏற்கனவே ஏனைய அரசியல்வாதிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேல் சனாதிபதி கருத்து வெளியிடுகையில்; அடுத்த வருடம் நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலை முன் கூட்டியே நடத்துவது சம்பந்தமாக முக்கிய தலைவர்களுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பாக ஏரியல்சரோனுக்கு விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்,

# இந்திய பொறியியலாளர் ஆப்கானிஸ்தானில் கடத்தல்

(கண்டகார்)

ஆப்கானிஸ்தானில் பணியாற்றிவந்த இந்திய பொறியியலாளர் ஒருவர் உட்பட நான்கு பேரைத் தீவிரவாதிகள் கடத்திச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது. இரண்டு பொலிசாருடனும் வாகனச்சாரதியுடனும் பொறியியலாளர் சென்று கொண்டிருந்தபோதே இந்தக்கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவிக்கும்போது கடத்தல்காரர்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை எனக்கூறியுள்ளனர்.

இந்தக் கடத்தலுக்கான அடிப்படைக்காரணம் தெரியவில்லை.

# அமெரிக்காவிடமிருந்து 70 விமானங்களை சீனா கொள்வனவு செய்ய முடிவு

(பீஜிங்)

அமெரிக்காவிடம் இருந்து சீனா 70 போயிங்ரக விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளது.

சீனாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை சீன சனாதிபதி சந்தித்துப்பேசிய போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த விமானங்கள் 2006 ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டுக்குள் வழங்கி முடிக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் முடிவடைந்ததும் அமெரிக்காவிடம் இருந்து மேலும் 80 விமானங்களை வாங்க சீனா திட்டமிட்டுள்ளது.

சீனாவின் போக்குவரத்துத் தேவைக்காக வரும் 20 ஆண்டுகளில் 2600 விமானங்கள் தேவைப்படுவதாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


ரொரன்ரோவில்...

# மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர் கனடா ரொரன்ரோவில் கெளரவிப்பு

**மாவீரர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினரைக் கெளரவிக்கும் நிகழ்வு கனடாவின் ரொரன்ரோவில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.**

இந்நிகழ்வினை மாவீரர் மேஜர் நரேனின் தாயார் திருமதி.ஸ்ரீ சத்தியவதி நல்லைநாதன் பொதுச் சுடரினை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து கனேடியத் தேசியக் கொடியேற்றல், தமிழீழ தேசியக் கொடியேற்றல், அகவணக்கம், மாவீரர்களுக்கு ஈகச் சுடர் ஏற்றல், மலர் வணக்கம் செலுத்தப்பட்டதுடன் உறுதி மொழியும் எடுக்கப்பட்டது.

இந் நிகழ்வின் ஒருங்கமைப்பாளர் நடராசா வரவேற்புரை வழங்கினார். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவீரர்களின் பெற்றோர், சகோதரர்களால் தங்களது உறவுகள் பற்றிய நினைவுரைகள் ஆற்றப்பட்டன. தொடர்ந்து உலகத் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த கண்ணன் உரையாற்றினார்.

தொடர்ந்து மாவீரர் பெற்றோர்கள் நினைவுப் பரிசில்கள் வழங்கி கெளரவிக்கப்பட்டனர்.

## தேசியத்தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு வாழ்த்து அட்டை வெளியீடு

(திருமலை)

திருகோணமலையில் மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கமைய திருமலை மாவட்டத்திலுள்ள அனைத்து பெண்கள் அமைப்புக்களும் ஒன்றிணைந்து எதிர்வரும் 26ஆம் திகதி தமிழீழ தேசியத் தலைவரின் 51 ஆவது அகவையை முன்னிட்டு புத்தக வடிவிலான வாழ்த்து அட்டை ஒன்றினை வெளியிடவுள்ளனர்.

இவ்வெளியீட்டு நிகழ்வு கட்டைபறிச்சான் விபுலானந்தா கல்லூரியில் 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை திருகோணமலை மாவட்ட தமிழீழ மகளிர் அரசியல் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

## மாதாந்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

முல்லைத்தீவில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபரினால் நடாத்தப்படவுள்ள மாதாந்தக் கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெற விருந்த அனைத்து மாவட்டக்குழுக் கூட்டங்களும் பிற்போடப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடல் அனைத்தும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார். (20)

## பூநகரி பிரதேச மாவீரர் பெற்றோர்கள் கெளரவிப்பு



மாவீரர் நாளினை முன்னிட்டு பூநகரி பிரதேச மாவீரர் பெற்றோர் கெளரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. பூநகரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாவீரர்களின் பெற்றோர்களை கெளரவித்தார்.

இதன் போது நல்லூர் மகாவித்தியாலய பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது.

மாவீரர்களின் பெற்றோர்கள், தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் எனப்பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## செட்டிகுளம் மற்றும் புதுக்குளம் பிரதேச மாவீரர் பெற்றோர்கள் கெளரவிப்பு

மாவீரர் நாளை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்திருக்கும் புதுக்குளம் மற்றும் செட்டிகுளம் பிரதேசங்களில் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை கெளரவிக்கப்பட்டார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், தமிழ் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.என்.ஜி. நாதன் ஏற்பாட்டுக் குழுவின் பிரமுகரான ஜெயச்சந்திரன் மற்றும் பொது அமைப்புக்களின் முதன்மை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

புதுக்குளம் சிவன் ஆலயத்திலிருந்து மாவீரர்களுடைய பெற்றோர் சுமார் 200 பேர் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு புதுக்குளம் மகா வித்தியாலய வாசலில் வைத்து மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டபின் மாவீரர்களின் பெற்றோர்கள் கெளரவிக்கப்பட்டனர்.



கிளிநொச்சி ஐந்தடிவான் பகுதியில் நேற்றைய தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் உழவு இயந்திரத்தின் துணையுடன் கிளிநொச்சி வெள்ளத்தினூடாக மக்களை ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபட்டதனைப் படத்தில் காணலாம்.. (படம் : சோதி)

# கடும்மழை தொடர்வதால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக மழை நீர் வீதிகளை குறுக்கறுத்துப் பாய்வதுடன் பல இடங்களில் வீதிப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. அத்துடன் குடியிருப்பு நிலங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன.

கிளிநொச்சி, பரந்தன், குமரபுரம் முரசுமோட்டை இரத்தினபுரம் ஆகிய பகுதிகளில் சில குடியிருப்புக்கள் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளமையின் காரணமாக குடியிருப்பாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கிளிநொச்சி டிப்போ கோணாவில் வீதியின் பல இடங்களில் வெள்ள நீர் வீதியை குறுக்கறுத்துப் பாய்வதன் காரணமாக மேற்படி வீதியின் பல இடங்களில் பாரிய அரிப்புக்குள்ளாக்கியுள்ளதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

மற்றும் வட்டக்கச்சி சந்தையடி, நாவலடிகோஸ்வே, மாவடி அம்மன் பாலத்தடியில் பெருமளவில் மழை வெள்ளம் பாய்வதினால் அப்பகுதியூடான போக்குவரத்துக்கள் யாவும் நேற்றைய தினம் தடைப்பட்டுள்ளதுடன் மேலும் மழை பெய்யும் பட்சத்தில் மேற்படி பகுதிகளில் போக்குவரத்துக்கள் யாவும் முற்றாகத் தடைப்படும் ஏது நிலை உருவாகலாம் என அஞ்சப்படுகின்றது.

மற்றும் தற்போது மேற்கொள்ளப்பெற்று வரும் கால போக நெற்பயிர்கள் பல இடங்களில் வெள்ளத்தில் அழிந்துள்ளது.

கரடிப்போக்கினூடான மூன்றாம் வாய்க்கால் பிரதான வீதியில் வெள்ள நீர் குறுக்கறுத்துப்பாய்வதனால் அதனூடாக போக்குவரத்துக்கள் யாவும் தடைப்பட்டுள்ளன. மற்றும் உருத்திர புரம் ஏழாம் வாய்க்கால் பிரதான வீதியினை குறுக்கறுத்துப் பாய்ந்த வெள்ளத்தில் அகப்பட்ட உந்துருளியொன்று நேற்றுக்காலை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், வெள்ளம் தொடர்ந்தும் பாய்வதன் காரணமாக நேற்று நண்பகல் வரை உந்துருளி மீட்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (சேT)

படங்கள் : (சோதி)


டிப்போ [illegible] வீதியில்...


கனகபுரம் 9ஆம் பண்ணை வீதியில்...

# தமிழீழ மாவீரர் நாள்-2005

## வரலாற்றில் தனிச்சிறப்புப் பெறும் தமிழீழ மாவீரர் நாள்

1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாளை முதலாவது தமிழீழ மாவீரர் நாளாகத் தமிழீழம் உணர்வார்ந்த நிலையில் கடைப்பிடித்தது. அன்றிலிருந்து தமிழீழத்தின் மிகப்பெரிய நிகழ்வாக எழுச்சியாக புனிதமாக உணர்வார்ந்த நிகழ்வாக தமிழீழ மாவீரர். நாள் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஏனைய நாடுகளில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுவதற்கும், தமிழீழ மாவீரர் நாள் கடைபிடிக்கப்படுவதற்கும் பெரும் வேறுபாடுகளுண்டு. ஏனைய நாடுகளில் எல்லாம் விடுதலைக்குப் பின் அமைந்த அரசுகளால் விழாக்கள் எடுக்கப்படுகின்றனவே தவிர, போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலங்களில் விழாக்கள் எடுக்கப்படுவதில்லை ஆனால் விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலும், எதிரியின் அச்சுறுத்தல்கள், தாக்குதல்களுக்கிடையிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையிலும் போராட்டத்தையும், நடாத்திக் கொண்டு தமிழீழ மக்கள் மண்ணின் விடிவிற்காகத் தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களை எழுச்சியோடு நினைவு கூர்ந்து வருகின்றனர். மாவீரர்களின் பெற்றோர்களை குடும்பத்தினரைப் போற்றிச சிறப்பிக்கின்றனர்.

வீரச்சாவடையும் தமிழீழ மாவீரர்களது வித்துடல்கள் மாவீரர் துயிலுமில்லங்களில் கல்லறைகளில் விதைக்கப்பட்டும், நடுகற்கள் நாட்டப்பட்டும் வழிபாடியற்றப்படுகிறது. மாவீரர் நாளில் மாவீரர்களின் பெற்றோர் குடும்பத்தினர் மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டு அன்று தமிழீழ மக்களால் போற்றி மதிப்பளிக்கப்படுகின்றனர். உலகில் எங்குமே தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வு போல மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள், அவர்களின் பெற்றோரும் குடும்பத்தினரும் போற்றப்பட்டு மதிப்பளிக்கப்படும் நிகழ்வுகள் நடைபெற்றதாகவோ நடைபெறுவதாகவோ வரலாறில்லை.

மாவீரர் எழுச்சி நாட்களின் நிகழ்வுகளும், நடைமுறை ஒழுங்குகளும்.

1989 ஆம் ஆண்டில் நவம்பர் 27 ஆம் நாளை மாவீரர் நாளாகவும் 1990 ஆம் ஆண்டில் இருந்து 1994 ஆம் ஆண்டு வரை நவம்பர் 21ஆம் நாளிலிருந்து 27 ஆம்நாள்வரை மாவீரர் ஏழலாகவும் (வாரமாகவும்) தமிழீழ மக்கள் எழுச்சி நிகழ்வாக நடைபெற்று வந்த தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் 1995 ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 25 ஆம் நாள் முதல் 27 ஆம் நாள் வரை மூன்று நாட்களில் எழுச்சி நாட்களாகத் கடைப் பிடிக்கப்படுகிறது.

தமிழீழ மாவீரர் பணிமனை



## யாழ்.குடாநாட்டில் தபால் மூல வாக்களிப்பிற்கு காரணமாக சில திணைக்களங்களின் தலைவர்கள்

### வாக்களிப்பில் கலந்து கொண்டோர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் அரச உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்களிப்பில் ஈடுபடுவதற்கு காரணமாக குறிப்பிட்ட சில திணைக்களங்களின் தலைவர்கள் இருந்துள்ளதாக தபால் மூல வாக்களிப்பில் கலந்து கொண்டவர்கள் உண்மை நிலைமையை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.**


வலிகாமம் பகுதியில் உள்ள பிரதேச செயலகங்களில் பொறுப்பான உத்தியோகத்தர்கள் வாக்களித்ததைத் தொடர்ந்து ஏனைய ஊழியர்களும், வாக்களித்துள்ளார்கள்.

இதே போன்று வலி. வடக்குப் பகுதியில் கல்வித் திணைக்களப் பணிப்பாளர்கள் அதிபர்கள் மூலம் ஆசிரியர்களை அழைத்து வாக்குகளைப் போட தூண்டியதாகவும், ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே போன்று அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஊழியர்கள் தமது பதவிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இருந்தால் வாக்களிக்க வேண்டும் என ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் செய்த பிரச்சாரம் காரணமாகவும் வாக்களித்துள்ளார்கள்.

பட்டதாரிகளாக இருந்தும் வாக்களிப்பது சம்பந்தமாக சுயமாக நடந்து கொள்ள முடியாமல் வாக்களித்ததையிட்டு இளைய தலைமுறையினரும், முதியோர்களும் எள்ளி நகையாடுகின்றார்கள். (41)

## பருத்தித்துறையில் திசைமாறி கரைசேர்ந்த தமிழ்நாட்டு மீனவர்கள் மூவர் மீட்பு



மீட்கப்பட்டவர்களில் இருவர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டின் நாகபட்டினத்திலிருந்து மீன்பிடிக்க கடலில் சென்ற மூன்று கடற்றொழிலாளர்கள் கடற்கொந்தளிப்புக் காரணமாக திசைமாறி தமிழீழத்தின் யாழ். பருத்தித்துறையில் கரைசேர்ந்தனர்.

கரை சேர்ந்த நாகபட்டினத்தைச் சேர்ந்த முத்தையா முத்துச்சாமி (வயது-46), முத்தையா பழனிவேல் (வயது - 35), இடும்பன் தண்டாயுதம் (வயது - 45) ஆகிய மூவரையும் பருத்தித்துறை வியாபாரிமூலை கடற்றொழிலாளர்கள் மீட்டனர்.

நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு கரை ஒதுங்கிய இவர்கள் தமிழீழ மீனவர்கள் சமாசத்தினரின் பராமரிப்பில் உள்ளனர். (கா)

## மயிர்க்கொட்டிகள் தொல்லை

(நல்லூர்)

நல்லூர் முத்திரைச் சந்திக்கு அருகாமையில் இருக்கும் நல்லூர் சாதனா பாடசாலை வகுப்பறைகளில் மயிர்க்கொட்டிகள் அதிகளவில் காணப்படுகின்றன.

ஆரம்ப வகுப்பு முதல் பிள்ளைகள் கற்கும் இப்பாடசாலையில் காணப்படும் மயிர்க்கொட்டிகளை இல்லாதொழிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் பாடசாலை அதிபரோ அன்றி ஆசிரியர்களோ மேற்கொள்ளவில்லை.

கடந்த சனாதிபதித் தேர்தலுக்கு வாக்களிப்பு நிலையமாகக் காணப்பட்ட இப்பாடசாலையில் கடமையாற்றிய ஊழியர்களும், வாக்களிக்கச் சென்றவர்களும் கூட மயிர்க் கொட்டியின் தாக்கத்திற்கு உள்ளாகி அவதிப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. ஆரம்பப் பிரிவு மாணவர்களும் கல்வி கற்கும் இப் பாடசாலை யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் அமைந்துள்ள போதிலும், மயிர்க்கொட்டியை அகற்ற நடவடிக்கையை எடுக்காமையை கல்வி வலய உத்தியோகத்தர்கள் கூட கருத்தில் கொள்ளாமை பெரும் வியப்பாக இருப்பதாக தேர்தல் கடமைக்கு வந்த உத்தியோகத்தர்கள் தெரிவித்தார்கள். (41)



தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு துயிலுமில்லங்கள் புனரமைக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன யாழ். கோப்பாய் துயிலுமில்லம் புனரமைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம். (41)

## இராணுவத்தை வெளியேறக் கோரி குடாநாட்டில் சுவரொட்டிகள்

யாழ்.குடாநாட்டை விட்டு சிறிலங்கா இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தி குடாநாட்டின் பலபகுதிகளிலும் எச்சரிக்கைச் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட மக்கள் படை என்ற பெயரில் ஒட்டப்பட்டுள்ள இச் சுவரொட்டிகள் யாழ்.நகரம்உட்பட வடமராட்சி,தென்மராட்சி தீவகம் மற்றும் வலிகாமப் பகுதிகள் எங்கிலும் ஒட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக முக்கியநகரங்கள் மற்றும் மக்கள் கூடும் பொது இடங்கள் என்பவற்றில் இச்சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

"சிறிலங்கா இராணுவமே எமது தாய்மண்ணை விட்டு வெளியேறு இல்லையேல் உனது ஆயுதங்களினாலேயே நீ கொல்லப்படுவாய்" "இராணுவமே எமது மண்ணிலிருந்து வெளியேறு இது உனக்கு கடைசி எச்சரிக்கை" போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. இதனை இராணுவத்தினரும் பொதுமக்களும் கூட்டம் கூடி நின்று வாசிப்பதை காண முடிகிறது.

இத்தகைய எச்சரிக்கை சுவரொட்டிகளால் குடாநாட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இராணுவத்தினர் பீதியடைந்துள்ளனர். (33)

## தென்மராட்சியில் பராமரிப்பின்றி காணப்படும் பல பொதுக்கிணறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சியில் உள்ள பொதுக் கிணறுகள் பலவும் பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன.

தென்மராட்சியின் பல பகுதிகளிலும், மீளக்குடியமர்ந்த மக்களின் நன்மை கருதி பல பொதுக் கிணறுகள் தோண்டப்பட்டு அவை பொது மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளன.

இவ்வாறான பொதுக் கிணறுகளை அமைத்த தொண்டர் அமைப்புக்கள் சரியான திட்டமிடல் இன்றி இக் கிணறுகளை அமைத்துள்ளமை காரணமாக. தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பல கிணறுகள் பாவிப்பார், பராமரிப்பார் இன்றிக் காணப்படுகின்றன.

மக்களின் தேவைப்பாடுகளைக் கவனத்தில் எடுக்காது இவ்வாறான பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டமை காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, தென்மராட்சியில் உள்ள பல பிரதேசங்களில் மக்கள் குடியேறியுள்ள போதும் அங்கு, போதியளவு நன்னீர்க் கிணறுகள் இல்லாமை அம் மக்களின் வாழ்க்கையில் பெரும் பிரச்சினையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.(33)

*–தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின்–*

# முகாமைத்துவக் கல்லூரி மாணவர் கௌரவிப்பு; இரு கலைப்பட்டப்படிப்புக்களுக்கான ஆரம்பநிகழ்வு



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முகாமைத்துவக் கல்லூரியில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், கலைப்பட்டப்படிப்பினதும் (GAQ), வர்த்தகப் பட்டப் படிப்பினதும் (B.COM) ஆரம்ப விழா நிகழ்வும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்திலுள்ள நடுவப்பணியகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சியில் அமையப்பெற்றுள்ள முகாமைத்துவக் கல்லூரியின் சிறிலங்கா கணக்கீட்டு தொழில் நுட்பவியலாளர் கழகத்தின் பாடத்திட்டங்களுக்கமைவான கற்கைநெறிப் பரீட்சையில் முதலாம், இரண்டாம் கட்டங்களில் சித்திபெற்ற 40 மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கிக் கௌர விக்கப்பட்டன.

இந்த நிகழ்வு முற்பகல் 10.45 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதான கணக்காளரான ந.சிறீஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது. ஆரம்பநிகழ்வாக பொதுச் சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து முகாமைத்துவக் கல்லூரியின் இணைப்பாளர் சண்முகவேலின் வரவேற்புரை இடம்பெற்றது. இதனையடுத்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் பிரதான குருக்களான ரட்ணேஸ்வராக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து கருத்துரைகளை முகாமைத்துவக் கல்லூரியின் விரிவுரையாளர்களான அருள்நாதன்,சென்யோன்ஸ் கல்லூரி ஆசிரியர்களான அகஸ்ரின், ஆசிரியர் யுகபாலசிங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ் மாவட்டப் பணிப்பாளரான ஜெயராஜ் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து சிறப்பு விருந் தினர்களாகக் கலந்துகொண்ட யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி கே.தேவராசா, அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி ஆகியோர் சிறப் புரைகளை நிகழ்த்தினர். இதனையடுத்து சித்திபெற்ற மாண வர்களுக்கான பரிசில்களை பீடாதிபதி கே.தேவராசா, சோ.தங்கன், கே.பி.றெஜி மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பிரிவுசார்ந்த பணிப்பாளர்களில் ஒருவரான சிறுவர் நலன் திட்டப் பிரிவுப் பணிப்பாளர் இராசு இரவி ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.அத்தோடு கல்லூ ரியில் விரிவுரைகளை நிகழ்த்திவரும் ஆசிரியர்களுக்கும் பரிசில் கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்களான கலைப் பட்டப்படிப்பினதும்(GAQ),வர்த்தகப் பட்டப்படிப்பினதும் (B.COM) ஆரம்ப விழா நிகழ்வும் இடம்பெற்றது. யாழ் பல்கலைக் கழ கத்தின் பூரண ஒத்துழைப்புடனும், அனுசரணையுடனும் நடாத் தப்படவிருக்கும் இப்பட்டப் படிப்பிற்கான பாடநெறிகள் வெகு விரைவில் தொடர இருக்கின்றன. முதற்கட்டமாக 200இற்கும் மேற்பட்டமாணவர்கள் இப்பட்டப்படிப்புக்களுக்கான விண்ணப் பங்களை நேரில் சமர்ப்பித்துள்ளனர்.

பீடாதிபதி கே.தேவராசா தனது சிறப்புரையில், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எந்தவித பாகுபாடுகளுக்கும் அப்பால் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்நிர்மாண வேலைத் திட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்ற அதேவேளை, மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு குறிப்பாக கல்வித்துறைசார்ந்த பல்கலைக் கழகப் பட்டப்படிப்புக்களுக்கு நிகரான கல்லூரிகளை நிறுவி நிர்வகித்து வருவது வரவேற்கக்கூடியதும் பாராட்டுக்குரியதென்றும் குறிப் பிட்டுள்ளார். அத்தோடு சமூக முன்னேற்றத்திற்காகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற இது போன்ற கல்வித்துறைசார்ந்த எந்தவொரு வேலைத்திட்டங்களாக இருப்பினும் யாழ் பல்கலைக்கழகம் தனது ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு எப்போதும் பின்னிற்காது என்றும் குறிப்பிட்டார்.

சோ.தங்கன் குறிப்பிடுகையில், காலத்தின் தேவையறிந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பல்வேறு புனர் நிர்மாணப் பணிகளையும்,ஏனையஇதுபோன்ற கல்வித்துறைசார்ந்த வேலைத்திட்டச் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருவதற் கூடாக எதிர்காலத்தில் துறைசார்ந்த ஆளுமை மிக்கதொரு சமுதாயத்தை உருவாக்க வழிசமைத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

கே.பி.றெஜி உரையாற்றுகையில், போர்ச்சூழல்களினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் முறையாகத் தங்களது கல்வியைப் பல்கலைக் கழகம்வரை தொடரமுடியாது ஏங்கிக் கொண்டிருக்கும் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே எவ்வளவோ பணிகளுக்கும் மத்தியில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் கல்வித்துறையிலும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இந்த முயற்சிகள் மென்மேலும் பயனுள்ளதாக அமைவதற்கு கல்வித்துறையில் உள்ளவர்கள் குறிப்பாக பல்கலைக்கழகக் கல்விமான்களின் ஒத்துழைப்புக்கள் தொடர்ந்தும் கிடைத்துவருவதால் இத் துறையில் மேலும் அபிவிருத்தியைக் காணமுடியுமென்று குறிப் பிட்ட அவர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இதுபோன்ற வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிவரும் கல்வி மான் களுக்கு தனது நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரி வித்தார்.

கல்விமான்கள் கல்லூரி மாணவர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்த இந்த நிகழ்வில் முகாமைத்துவக் கல்லூரியினதும், மாணவர்களினதும் வளர்ச்சியில் பங்காற்றிக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள், பணி யாளர்கள், யாழ் பல்கலைக் கழக கல்விமான்கள் மற்றும் பல ருக்கான நன்றியுரைதலை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துறைசார்ந்த பிரிவுப் பணிப்பாளர்களில் ஒருவரான பிரபு தெரிவித்தார்.

(லோ)

---

# ஐ.தே.கட்சியின் தலைமைப் பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க தொடரவேண்டும்

*–எஸ்.பி.திசாநாயக்க வேண்டுகோள்*

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவே பதவிவகிக்க வேண்டும் என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறைத்தண்டனை அனுபவித் துவரும் எஸ்.பி.திசாநாயக்க, சனாதிபதித்தேர்தலில் ஏற்பட்ட தோல் விக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும் என்ற கோரிக் கையை முற்றாக நிராகரித்தார்.

தேர்தல் தோல்விக்கு பிரச்சார பணிகள் உரிய முறையில் முன் னெடுக்கப்படாமையே காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை யிலேயே ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் தனது அரசியல் செயற் பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாற்றம் ஏற்படவிருப்பதாகவும், ரணில் விக்கிரமசிங்க அரசியலி லிருந்து ஒதுங்கப்போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், கட்சியின் முக்கிய உறுப் பினர்கள் பலரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதுடன், தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை யிலேயே கட்சிவழிநடத்திச் செல்லப் படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 2004ஆம் ஆண்டு தேர் தலில் பெற்ற வாக்குகளின் எண்ணிக் கையைவிட13 இலட்சம் வாக்கு களை இந்தத் தேர்தலில் அதிகமாகப் பெற்றிருப்பதாகவும்,

ரணில் விக்கிரமசிங்க தலை மையில் இந்த வளர்ச்சி ஏற்பட்டி ருக்கும் நிலையில் அவரை கட்சித் தலைவர் பதவியிலிருந்து மாற்ற வேண்டிய தேவை இல்லை என்றும் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

---

# உடுவே தம்மாலோக தேரர் மகிந்தவை ஆதரிக்க முடிவு

(கொழும்பு)

ஜாதிகஹெலஉறுமயவின் பாராளு மன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை அவர் விடுத் துள்ள அறிக்கையிலேயே இந்த அறிவிப்பினை விடுத்துள்ளார்.

புதிதாகத் தெரிவு செய்யப் பட்டிருக்கும் சனாதிபதிக்கு தனது ஆசிகளைத் தெரிவித்துள்ள தம்மா லோக தேரர், மகிந்த ராஜபக்ஷ இந்த சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஜே.வி.பியின் ஆற்றிய பங்கு பாராட்டுக்குரியதெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பிரித்து விடுவார் என்பதை இந்த சனாதிபதித்தேர்தல் நிரூபித்து விட்டதென அந்த அறிக்கையில் உடுவே தம்மாலோக தேரர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் உடுவேதம்மா லோகதேரர் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரம சிங்கவுக்கு ஆதரவு வழங்கியிருந் ததுடன், சனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அரசியலிலிருந்து விலகப் போவதாகவும் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

---

# மகிந்தவின் வாக்குறுதிகளிற்கமைய சமாதான பேச்செனில் புலிகளின் ஆயுதங்களை களையவேண்டியிருக்கும்

--சுதந்திர ஊடக இயக்கம் கருத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமா தானப் பேச்சுவார்த்தைகளை ஆரம் பிப்பதானால் அவர்களிடமிருக்கும் ஆயுதங்களை புதிய சனாதிபதி களையவேண்டியிருக்கும் என்று சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய தெரி வித்துள்ளார். புதிய சனாதிபதி தெரி வின் பின்னர் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான சாத்தியப் பாடுகள் குறித்துக் கருத்துத் தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சமாதான முயற்சிகள் குறித்து புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப் பதானால், எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் விடுதலைப் புலி கள் வசமிருக்கும் ஆயுதங்களை களையவேண்டியிருக்கும் என்று இதன் போதுசுனந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டது போல போர்நிறுத்த உடன்படிக் கைக்கு எதிராக அவருக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே, விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயு தங்களைக்களைய வேண்டிய நிர்ப் பந்த நிலை அவருக்கு ஏற்பட்டிருக் கிறது என்றும் அவர் கூறினார்.

---

## தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு

# தமிழீழ நுண்கலைக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

தமிழீழ நுண்கலைப் பிரிவினால் மாவீரர் நாளையொட்டி கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையே கடந்த 19,20 ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற போட்டி முடிவுகள் வெளி யாகியுள்ளன. கிளி.பண்பாட்டுமண்ட பத்தில் நடைபெற்ற இப்போட்டிகள் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையினரின் அனுசரணையுடன் சிறப்பாக நடைபெற்றிருந்தது. இப்போட்டிகளின் முடிவு பின்வரு மாறு,

வில்லிசை:-

முதலாமிடம் கிளி/ கனகபுரம் ம.வி,

இரண்டாமிடம் கிளி/கண்டாவளை ம.வி,

மூன்றாமிடம் கிளி/ மத்தியகல்லூரி

நாட்டிய நாடகம்:-

முதலாமிடம் கிளி/ மத்திய கல்லூரி,

இரண்டாமிடம் கிளி/ கண்டாவளை ம.வி,

மூன்றாமிடம் கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி.

இந்நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் 26ஆம் திகதி ஆனையிறவில் நடைபெறவுள்ள நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. அன்று முதலாமிடத்தைப்பெற்ற நிகழ்வுகள் ஆற்றுகைப்படுத்தப் படவுள்ளன என நுண்கலைப் பிரிவி னர் தெரிவித்துள்ளனர்.

---

# நுரைச்சோலை மின்நிலைய இறுதி முடிவுகள் மிக விரைவில்!

*–இலங்கை மின்சாரசபை நம்பிக்கை*

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின் நிலையம் தொடர்பான இறுதி முடி வுகள் மிக விரைவில் எடுக்கப்படும் என தான் நம்புவதாக இலங்கை மின் சார சபையின் பொது முகாமையாளர், ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சில பிரிவினர் அரசியல் லாபம் பெறும் வகையில் இந்த திட்டத்தை நிறுத்தும் நோக்கில், வதந்திகளை பரப்பி வருவதாகவும் அவர் தெரி வித்தார். எப்படியிருந்த பொழுதிலும், தேசிய அபிவிருத்தி நடவடிக்கை களுக்கு புதிதாக தேர்ந்தெடுக் கப்பட்டுள்ள சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னுரிமை வழங்கு வதில் முனைப்பாக ஈடுபடப் போவ தாக உறுதி அளித்துள்ள காரணத் தினால் நுரைச்சோலை அனல் மின் நிலையம் தொடர்பான உறுதியான முடிவுகள் மிகவிரைவில் எடுக் கப்பட்டு விடும் எனவும் தெரிவித்தார். மின்சார விநியோகத்தின் அவசியத் தை உணர்ந்து இரண்டு வகையான நிலைப்பாட்டை எடுப்பதை அரசியல் வாதிகள் தவிர்த்து கொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (32)



# விளையாட்டு அரங்கு

## சோதனை களம்





18ஆண்டுகள் காத்திருந்து ஆஷஸ் தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து அணி அந்த மகிழ்ச்சியில் இருந்து மீளாத நிலையில் அதிர்ச்சித் தோல்வி ஒன்றை சந்தித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளாக டெஸ்ட் போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்று அவுஸ்திரேலியாவுக்கு நிகரான அணியாக வலம் வந்த இங்கிலாந்து அணிக்கு இத்தோல்வி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்.

இத்தனைக்கும் அணியில் இளம் வீரர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்ததுடன் வெற்றித் துடிப்புடன் செயற்படுவது அந்த அணியின் மிகப்பெரிய பலமாகவும் இருந்தது.

இப்படியிருக்க இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி முதல் டெஸ்டில் இங்கிலாந்தை எப்படி வீழ்த்தினார்கள் என்பது ஆச்சரியம்தான். ஆனாலும் இங்கிலாந்து அணி பாகிஸ்தானின் முதல்தர அணியுடன் தடுமாறியது. பாகிஸ்தான் தேசிய அணியை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்ற கேள்வியை எழுப்பியிருந்தது. அத்துடன் அணித் தலைவர் வோகன் போட்டியில் இடம்பெறாதது அணிக்கு பலவீனமாகவே கருதப்பட்டது.

ஏனெனில் ரெஸ்கொதிக், பிளிண்டொப், வோகன் போன்ற துடுப்பாட்ட வீரர்களே பாகிஸ்தான் மண்ணில் விளையாடிய அனுபவம் மிக்கவர்கள். மற்றவர்கள் சிறந்தவர்களாக இருக்கின்ற போதும் ஆசிய ஆடுகளங்களில் மின்னுவது என்பது கடினமான ஒன்றே.

ஏனெனில் அதற்கு ஏற்ற வகையிலேயே பாகிஸ்தான் தனது அணியை தயார்ப்படுத்தியுள்ளது.

ஆஷஸ் தொடரில் வோர்ணேடு மெக்கில் அணியில் இருந்திருந்தால் இங்கிலாந்தை வீழ்த்தியிருக்க முடியும். வேகத்தை நம்பியே வீணாகிப் போனது அவுஸ். என்று பரவலாகப் பேசப்பட்டது. இதை கெட்டியாகப் பிடித்துக்கொண்ட பாக் சுழற்பந்து வீச்சாளர்களை அதிகமாக இணைத்துக் கொண்டதுடன் வேகப்பந்து வீச்சாளர்கள் அக்தர், சபீர் அகமட் ஆகியோர் மீண்டும் இணைய இன்சமாம் தலைமையிலான பாக். அணி புத்தெழுச்சி பெற்றுள்ளது.

வெறும் 198 ஓட்டங்களை வெற்றிக்குப் பெறவேண்டிய இங்கிலாந்தை சுருட்டியடித்துவிட்டதை பார்க்கும் போது எதிர்வரும் போட்டிகளை எவ்வாறு இங்கிலாந்து பாகிஸ்தானை சமாளிக்கப் போகின்றது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவைச் சமாளித்துவிட்டோம். பாகிஸ்தான் எல்லாம் ஒரு அணியா என்ற எண்ணத்தில் இங்கிலாந்து இந்தத் தொடரை சந்திக்க நினைத்தால் சங்கடம்தான். சுழற்பந்து வீச்சாளர்களை சாதுரியமாகச் சமாளிக்கும் வீரர்கள் இந்த அணியில் குறைவுஎன்பதால் இந்தத் தொடரை வெல்லும் வாய்ப்புள்ள அணியாக பாகிஸ்தானே விளங்கும் என்ற எதிர்பார்ப்பே அதிகம் உள்ளது.

## தொடரும் லாறாவின் சோகம்



சதம் இரட்டைச் சதம் மூச்சதம் நாற்சதம் என விளாசி ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட வீரருக்கு தற்போது நடந்ததென்ன? டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலிய வீரர் அலன்போடரின் சாதனையைத்தான் அவரால் முறியடிக்க முடியுமா?

உங்களுக்கு சொல்லாமலேயே புரிந்திருக்கும் அந்த வீரர் யார் என்று? ஆமாம் மேற்கிந்தியதீவுகள் அணியின் நட்சத்திர வீரரும், உலகின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவருமான பிரையன் லாறாவேதான்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள மேற்கிந்தியதீவுகள் அணி மூன்று டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. இத்தொடரில் விளையாடிவரும் பிரையன் லாறா இன்னும் 141 ஓட்டங்களைப் பெற்றால் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையை தன்னகத்தே தக்கவைத்துக்கொள்ளமுடியும்.

அந்த வகையில் மீதமுள்ள ஒரு டெஸ்ட் போட்டியில் இச்சாதனையை அவரால் ஏற்படுத்த முடியுமா? என்பதே இன்று ரசிகர்கள் மத்தியில் எழும் வினாவாக உள்ளதுடன் அவரின் துடுப்பாட்டம் இந்தளவிற்கு பின்நோக்கி சென்றுள்ளமை அவர்களை கவலையில் ஆழ்த்தும் ஒன்றாகவுள்ளது.

அணியில் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுள்ள அவர் அண்மைக்காலமாக அந்த கௌரவத்தை தக்கவைத்துக் கொள்ளும்வகையில் துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை.

அண்மையில் நடைபெற்றுமுடிந்த அவுஸ்திரேலியாவுக்கெதிரான சுப்பர் சீரிஸ் தொடரிலும் பெரிதாக எதிர்பார்க்கப்பட்டபோதும் அத்தொடரில் மொத்தமாக 57 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டார்.

அவுஸ்திரேலியாவில் தற்போது நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் 103 ஓட்டங்களை மட்டுமே அவரால் பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்த நிலையில் தன்னுடைய ஆட்டத் திறனை விருத்தி செய்து கொள்ள வேண்டிய காட்டாய நிலைக்கு அவர் உள்ளாகியுள்ளதுடன் அணியின் நிலையையும் உணர்ந்து கொள்ள வேண்டியவராகவுள்ளார்.

அதாவது மேற்கிந்தியத்தீவுகள் அணி தோல்வி மேல் தோல்வியைச் சந்தித்து வருவதுடன் கடந்த 13 ஆண்டு காலமாக அவுஸ்திரேலிய அணியிடம் டெஸ்ட் தொடரை இழந்துள்ளது.இத்தோல்விக்கு இம்முறை முற்றுப்புள்ளி வைப்போம் என்றவர்களுக்கு இம்முறையும் ஏமாற்றமே மிஞ்சியது. அதாவது இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணி படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

எனவே, இத்தோல்வியை மனதிற்கொண்டு அவ்வணியின் முன்னாள் வீரரான அலன் போடரின் சாதனையை அவ்வணிக்கு எதிராக லாறா முறியடிப்பதன் மூலம் தோல்வியால் துவண்டு போயிருக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ரசிகர்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஒன்றாக இருக்கும்இதை உணர்ந்து கொண்டு லாறா அடுத்த போட்டியில் சிறப்பாக தன்னுடைய ஆட்டத் திறனை வெளிப்படுத்துவாரா? என்பதே மேற்கிந்தியத்தீவுகள் அணிய ரசிகர்களின் அவாவாகவுள்ளது. ரசிகர்களின் ஆவலை பூர்த்தி செய்வரா லாறா?

பூ.சுபானந்

## கால்பந்து வீரரின் இழப்பு

உதைபந்தாட்டத்தில் ஒரு அணிக்காக பல சாதனைகளையும் வெற்றிகளையும் பெற்றுத் தரும் வீரர் ஒருவர் அவ்வணியிலிருந்து விலகி வேறொரு அணியில் திடீரென இணைவதாக அறிவிப்பது எதிர்பாராத அதிர்ச்சியான தகவலாகும்.அந்த வகையில் மான் யுனைட்டட் அணிக்காக சுமார் 12 வருடகாலமாக பாடுபட்டு பல உள்ளூர் வெற்றிகளையும் சர்வதேச வெற்றிகளையும் பெற்றுக் கொடுத்த சாதனை வீரர் றோய் கீண் திடீரென தனது அணியிலிருந்து நீங்கியுள்ளமையானது உதைபந்தாட்ட வீரர்களுக்கு மிகவும் கவலை தரும் விடயமாகும்.

இதற்கு முக்கிய காரணம்அண்மையில் நடைபெற்ற கழகப் போட்டியொன்றில் மிடில்ஸ்ப்ரோ அணியிடம் யுனைட்டட் 4-1 என்ற கணக்கில் தோல்வியைச் சந்தித்ததும், கடந்த செப்ரெம்பரில் லிவர்பூல் அணியுடன் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் பூச்சியத்திற்குப் பூச்சியம் என்ற கணக்கில் ஆட்டம் சமநிலை பெற்றதா என்று எண்ணத் தோன்றுகின்றது.

எனினும் காயம் குணமானதும் யுனைட்டட் அணிக்குத் திரும்பி வந்து பயிற்சியில் ஈடுபட்டு இருந்தவர், கடந்த வெள்ளிக்கிழமை விடுத்த திடீர் அறிவிப்பு அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மத்தியதரவரிசை வீரரான இவர் உலகின் தலைசிறந்த வீரராவார். சுமார் 20 வருடங்களாக அவ்வணிக்காக ஆடியகீண் யுனைட்டட் அணியை உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார். அதனால் அவர் இனி மேல் இணைந்துகொள்ளவிருக்கும் அணிக்காக அவரின் அடுத்தபணி தொடரட்டும் என அதிகாரிகள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இவர் 1993 ஆம் ஆண்டு 3.75 மில்லியன் பவுணுக்கு யுனைட்டட் அணியில் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதே வேகத்துடன் 1994 ஆம் 96ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உதைபந்தாட்ட சங்க கிண்ண லீக் ஆட்டத்தில் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தார். 1997 ஆம் ஆண்டிலும் கிண்ணத்தை தக்கவைத்தார்.1999 ஆம் ஆண்டு அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட இவர் அந்த ஆண்டு மேற்படி கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் பற்கேற்பதிலிருந்து தடைவிதிககப்பட்டதால் கிண்ணத்தை அணி பறிகொடுத்தது.

..அத்துடன் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற உதைபந்தாட்ட சங்கப் போட்டியில் ஆறாவது முறை இறுதிப் போட்டியில் ஆடி மில் வோல் அணியை வெற்றிகண்டு கிண்ணத்தை சுவீகரிக்க உதவினார். 1999 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை இவர் கைப்பற்றிக் கொடுத்தமை மறக்கமுடியாத ஒன்றாகும். எவ்வாறாயினும் அதிகாரிகளின் அழுத்தமே இவரின் விலகலுக்குக் காரணமாக அமைந்திருப்பதாக கருதப்படுவதால் நட்டம் முழுதும் யுனைட்டட் கழகத்தையே சேரும்.



வடிவேல்

## மன்னாரின் முத்து



வயது வெறும்16 தான்.ஆனால் அகில உலக கராத்தே போட்டியில் பதக்கம் வென்று பெருமை சேர்த்துள்ளார் தமிழர் தாயகத்தின் மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த புனித வளனார் றோ.க.தமிழ்வித்தியாலய மாணவி ஜெஸ்மன் றெஸ்னிக்கா பீரிஸ்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற அகில உலக கராத்தே போட்டியில் "கட்டா" மற்றும் "குமுத்தே" போட்டிகளிலேயே வெளிநாட்டு வீரர்களுடன் அவர் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார்.

கராத்தேயில் சண்டை போடாமல் நிழலாட்டமாக தற்காப்பு கலைப்பயிற்சியை செய்து காட்டுவதை கட்டாபிரிவு என்பர். இதில் தனது திறமையை தொடர்ந்து நிகழ்த்திவந்த றெஸ்னிக்கா பீரிஸ் கொழும்பில் நடைபெற்ற அகிலஇலங்கை ரீதியான போட்டியில் தங்கம் வென்று சர்வதேச ரீதியான போட்டிக்கு தகுதிபெற்றார்.

மன்னார் தாழ்வுப்பாட்டை பிறப்பிடமாகக் கொண்ட றெஸ்னிக்கா யுத்த சூழல் காரணமாக அண்டை நாடான தென்இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்லவேண்டி ஏற்பட்டது. அப்போது றெஸ்னிக்காவுக்கு நான்கு வயது.

அப்போது தனது தந்தையாரும் கராத்தே கலையில் கறுப்புப்பட்டி பெற்றவருமாகிய பறுனாந்து ஜெஸ்மன்பீரிஸ் என்பவர் மூலம் தற்காப்புக் கலையான கராத்தே கலையை பயில ஆரம்பித்தார்.

எட்டு வயதில் மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கராத்தே போட்டியில் மதுரை வாழ் மக்கள் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். அன்றிலிருந்து பயிற்சியாளரான தந்தைக்கு நம்பிக்கைக்குரிய மாணவராகத் திகழ்ந்தார் றெஸ்னிக்கா பீரிஸ்.

10 வயது வரை "கட்டா" "மற்றும் குமுத்தேப்போட்டிகளில் 15 முறைக்கு மேல் முதலாம்,இரண்டாம் இடங்களைப் பெற்று அனைவரதும் பாராட்டைப் பெற்றதுடன் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் இலங்கைச் சிறுமி என்ற ரீதியில் பல சிரமங்களை சந்தித்தபோதிலும் ஆற்றலின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டதுடன். அங்குள்ள பலமுக்கிய பிரமுகர்களின் (மாவட்ட ஆளுநர், பொலிஸ் அதிபர்) பாராட்டுக்களைப் பெறவும் தவறவில்லை.

மீண்டும் தாயகம் திரும்பியுள்ள இவரும் இவரது குடும்பமும் மன்னார் மாவட்டத்தில் கராத்தே கலையை வளர்ப்பதில் முன்னோடியாக திகழ்கின்றனர். பொதுவாக மன்னார் மாவட்டத்தில் கராத்தேகலை புத்தூக்கம் பெற்றுள்ளது என்று கூறுவது பெருமைக்குரிய விடயமே.

இவரது வெற்றிப்பாதையாக கராத்தே மீது தனித்திறமையுடன் கூடிய அளவற்ற ஈடுபாடு இருப்பதைக் காணமுடிகின்றது.

இவரது கராத்தே வாழ்க்கையில் பல ஏமாற்றங்கள் ஏற்பட்டபோதும் தொடர்ந்து ஈடுபட்டு வருவது எதிர்காலம் ஔிமயமானதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

28-7-2004 இல் மன்னார் மாவட்ட கராத்தே சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்ற றெஸ்னிக்கா வடக்கு கிழக்கு மாகாண மட்டப்போட்டியிலும் சம்பியன் பட்டம் வென்றார். ஆயினும் பதுளையில் நடைபெற்ற தேசிய மட்டப்போட்டியில் தீர்ப்பில் ஏமாற்றம் ஏற்பட்டதால் தோல்வியடைய நேரிட்டது.

இப்படியாக பல களங்களைக் கண்ட றெஸ்னிக்கா லண்டனில் இருந்து கிளிநொச்சிக்கு வருகை தந்த கராத்தே நிபுணர் ஸ்மித்தினால் பாராட்டவும் பட்டார்.

இவர் கராத்தே கலையை விருப்புடன் கற்கும் அதேவேளை பாடசாலையில் முன்னோடி மாணவியாகத் திகழ்வதுடன் கல்வியில் திறமைமிக்கவராகவும் நல்லொழுக்கம் மிக்க மாணவியாகவும் திகழும் றெஸ்னிக்காவின் சாதனைப் பயணம் தொடரட்டும்.

இ.சியான்.

இராணுவத் தளபதிகள் ஓய்வுபெறும் வயது உயர்வு

# சந்திரிகாவின் உத்தரவை புதிய சனாதிபதி ரத்துச் செய்ய முடிவு

சிறிலங்கா முப்படைத்தளபதிகளினதும், சிரேஷ்ட அதிகாரிகளினதும் ஓய்வுபெறும் வயதை உயர்த்த முன் னாள் சனாதிபதி சந்திரிகா குமார துங்க அறிவித்திருந்த உத்தரவை இரத்துச் செய்வதற்கு புதிய சானதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

சனாதிபதித் தேர்தலுக்கு மூன்று வாரங்களுக்கு முன்பாக சந்திரிகா குமாரதுங்க இது தொடர்பிலான உத்தரவை பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவானது, நீதியற்றது, பாரபட்சமானது என்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளார். எனது முதன்மையான பரிசீலனைகளில் இந்த விடயமும் இருக்கும் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தேர்தல் பரப்புரைக்காக பலாலி இராணுவத் தளத்துக்கு மகிந்த ராஜபக்ஷ சென்ற போது அவரிடம் இராணுவத்தினர் இது தொடர்பில் முறைப்பாடு செய்தனர். தாங்கள் இராணுவத்தின் உயர் நிலைகளுக்கு வருவதற்கு முன்பாகவே ஓய்வு பெற்றுவிட வேண்டிய நிலை இருப்பதாகவும் மகிந்தவிடம் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

தாம் சனாதிபதியாக தெரிவானவுடன் இந்தபுதிய நடை முறையை இரத்துச் செய்வதாக மகிந்த ராஜபக்ஷவும் உறுதியளித்திருந்தார். சந்திரிகாவின் புதிய உத்தரவு இரத்துச் செய்யப்படும் நிலையில், இந்த உத்தரவின் மூலம் பலனடைந்து வரும் இராணுவ அதிகாரிகள் பதவி விலகும்படி உத்தரவு பிறப்பிக்கப்படக் கூடும் என்றும் தெரிகிறது.

# கடற்படை இரண்டாம் நிலைத்தளபதி மகிந்தவால் விரைவில் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையின் இரண்டாம் நிலைத்தளபதியை புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷ விரைவில் நியமிப்பார் என்று கடற்படை தலைமையகம் எதிர்பார்க்கிறது. இரண்டாம் நிலைத் தளபதியாக இருந்த மொகான் விஜய விக்கிரமவை கடற்படை தளபதியாக நியமிக்காமல் மூன்றாம் நிலையிலிருந்த வசந்த கரன்னகொடவை சந்திரிகா நியமித்திருந்தார்.

இதில் அதிருப்தியடைந்த மொகான் விஜயவிக்கிரம, தான் ஓய்வுபெறுகிற நவம்பர் 24 ஆம் திகதி வரை விடுப்பில் சென்றுவிட்டதால் இரண்டாம் நிலை தளபதியின்இடம் நிரப்பப்படாமல் இருந்தது. இந்த நிலையில் சந்திரிகாவிடம் சரத் ரட்ணகீர்த்தியை நியமிக்குமாறு தளபதி வசந்த கரன்னகொட பரிந்துரை செய்தார். ஆனால் அதை நிராகரித்த சந்திரிகா மேலும் சில அதிகாரிகளின் பட்டியலைக் கோரியிருந்தார். இருப்பினும் நவம்பர் 17 ஆம் திகதிக்கு முன்னதாக சந்திரிகா எதுவித முடிவும் மேற்கொள்ளவில்லை. இதனால் புதியசனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ, விரைவில் இரண்டாம் நிலைத் தளபதியை நியமிக்கக் கூடும் என்று சிறிலங்கா கடற்படையினர் எதிர்பார்க்கின்றனர்.

# மீராவோடையில் முஸ்லிம் தம்பதிகள் வீட்டில் வைத்துச்சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு மாவட்டம் மீராவோடையில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஆயுத பாணிகளால் முஸ்லிம் தம்பதிகள் அவர்களது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

ஐ.தே.க ஆதரவாளரான மீராசாகிபு லெப்பை அகமது லெப்பை மற்றும் அவரது மனைவியான மொகமது லெப்பை பௌசியா ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

மேற்படி தம்பதிகளில் குடும்பத் தலைவரான மீராசாகிபு அகமது லெப்பை மத்திய கிழக்கிற்கு ஆட்களை அனுப்பும் உப முகவர் என்றும் கடந்த சனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவிற்கு ஆதரவு அளித்தவர் என்றும் அந்தப் பிரதேச மக்களின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அரசியல் காரணங்களுக்காக அல்லது மத்திய கிழக்கு வேலை வாய்ப்பு தொடர்பான கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக இந்த இரட்டைக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என விசாரணைகளை மேற்கொண்டு வரும் வாழைச்சேனை சிறிலங்கா பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கொலைகள் தொடர்பாக பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளின்படி கொலையாளிகள் முதலில் கணவனை சுட்டுக் கொன்றுவிட்டு சென்றுள்ளார்கள். பின்பு தங்களை அவரது மனைவி அடையாளம் கண்டிருக்கலாம் என சந்தேகம் கொண்டு மீண்டும் திரும்பி வந்து மனைவியையும் சுட்டுகொன்றுவிட்டு சென்றுள்ளனர்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஆயுத பாணிகளினாலேயே இந்த இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மகிந்தவுக்கு அமெரிக்கா வாழ்த்து

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்கா வாழ்த்து தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அமெரிக்கா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தமிழர்களின் புறக்கணிப்புக் குறித்த தமது அதிருப்தியையும் குறிப்பிட்டுள்ளது.

சிறிலங்காவின் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்கள் தங்களது கருத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பு தடுக்கப்பட்டதாகவும் இது விடயத்தில் விடுதலைப் புலிகளின் தலையீட்டுக்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் அமெரிக்க செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பற்றுச்சீட்டை பெற 'பவ்ரல்' வலியுறுத்து

(கொழும்பு)

எதிர் வரும் காலங்களில் வாக்காளர்கள் தம்மை தேர்தல் திணைக்களத்துடன் பதிவு செய்து கொள்ளும் பொழுது கிராம சேவகர்களிடமிருந்து பற்றுச் சீட்டொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என தேர்தல்களை கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு ஆலோசனை கூறியுள்ளது.இதன் மூலம் வாக்காளர்கள் தமது வாக்களிக்கும் தன்மையை இழக்க வேண்டி வராது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லிரொட்ரிகோ விபரம் தெரிவிக்கையில் இப்படியான நடவடிக்கையின் மூலம் வாக்காளர்கள் நீதியை நீதிமன்றங்களின் ஊடாக பெற முடியும்.

பற்றுச் சீட்டைப் பெற்ற நிலையிலும், தேர்தல்களில் வாக்களிக்க முடியாமல் போகும் வாக்காளர்கள், சட்ட பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க முடியும். வாக்காளர்கள் சார்பாக எமது அமைப்பு சட்ட நடவடிக்கைகளை எடுக்க தயாராக உள்ளது என பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்..(32)


COMITE INTERNATIONAL GENEVE

# Vacancy Announcement
# Secretary

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a dedicated **female professional** willing to assume responsibilities as a **Secretary** for the Administration Department.

The candidate should have the following **qualifications:**

* Completion of 'A' Level Education. Higher (university) degree preferred
* Excellent computer - literacy
* Excellent spoken and written English and Tamil
* Working Experience with an international organization and / or in a secretarial position
* Professional qualification in secretariat

**Core responsibilities** include:

* Drafting of external correspondence in Tamil / English
* Reception and handling of internal / outgoing correspondence
* Filing of institutional documents
* Preparation of accommodation arrangements for incoming visitors
* Conduct welcome - briefing for arriving visitors / expatriates
* Assume team - leader responsibilities for a team of 8 house - maids

**Employment Conditions:**

According to ICRC's National Scale and employment conditions

We encourage suitable candidates to sent their complete CVs to ICRC's office in Kilinochchi before **Friday, 25th November 2005.** Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi
Iraniamadhu Junction
Kilinochchi
Phone: 071-2375697\071-2296680

(சி-13352)

# வேலைவாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் **2 1/2** மாதற்திற்குள்.

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆட்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத்தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | - |
| எிபொருள் நிரப்பு நிலையத்தில் எிபொருள் நிரப்புபவர் | 400 | - |
| வாகனம் கழுவுபவர்கள் | 200 | - |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்.
சகல நாடுகளுக்கும் செல்லக் கூடிய கடவுச்சீட்டு, பாஸ்போட் அளவு படம் 15 (கலர்), வீட்டுப் பணிப் பெண்கள் 200 பேர். வயதெல்லை 19 – 45 ,சம்பளம் 20000 .
தொடர்பு – 0777 279813 மைக்கல்.
குறிப்பு முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. (6914)

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்புக்கள் உள்ளன.பயணம் **2 1/2** மாதற்திற்குள்.

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சுவேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாட்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| ஸ்பிறே பெயின்ரர்/ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின், றேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர்,ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்). | 20 |
| கைற்றொனிக் மெக்கானிக். | 10 |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்.
பாஸ்போட்,பாஸ்போட் அளவு புகைப்படம் 05,
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.
தொடர்பு – 0777 279813 மைக்கல்.
குறிப்பு :- முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

# பாராளுமன்றில் குளிர்கால கூட்டத்தொடர்; பிரச்சினைகளைக் கிளப்ப எதிர்க்கட்சிகள் தயார்

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் பல்வேறு பிரச்சினைகளை முன்வைக்க எதிர்க் கட்சிகள் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாளை மறுதினம் ஆரம்பமாகும் இக்கூட்டத்தொடர் தொடர்ந்து ஒரு மாதத்திற்கு இடம்பெறும்.

பீகார் தேர்தல்முடிவுகள் வெளி வரும்வேளையில் தொடங்கும் இந்த கூட்டத் தொடர்பிரச்சினைகளை எழுப்ப பா.ஜனதா கூட்டணி கட்சிகள் தயாராகி வருகின்றன. ஈராக் எண்ணெய்க்கு உணவு திட்ட ஊழல் உட்பட 45 பிரச்சினைகளை இந்த தொடரில் எழுப்ப அந்தக் கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள அரசியல் கட்சி தலைவர்களுக்கு ரஷ்ய உளவு நிறுவனம் பணம் வழங்கியது பற்றி வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யும்படியும் அவர்கள் வற்புறுத்த உள்ளனர். மற்றொரு முக்கிய பிரச்சினை ஈரான் அணுஆயுத பிரச்சினை விவகாரமும் சூடு பிடிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

# ஈரான் அணுசக்தி பிரச்சினையில் மத்திய அரசின் கொள்கை என்ன?

## -மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கேள்வி

(புதுடில்லி)

ஈரான் அணுசக்தி பிரச்சினையில் இந்திய மத்திய அரசின் கொள்கை என்ன என்பதை உடனே தெரிவிக்கும் படி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி உள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் பிரகாஷ் கரத் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசும்போதே இதனை தெரிவித்தார்.

ஈரான் அணுசக்தி கொள்கையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் நிலை என்ன என்பதை பாராளுமன்றக் கூட்டம் தொடங்கும் முன்பு தெரிவிக்க வேண்டும். ஈரான் விடயத்தில் எந்த முடிவு எடுத்தாலும் அது இந்தியாவின் நலனை மையமாக வைத்தே எடுக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் கருத்தாகும். வெளிநாட்டின் நெருக்குதலுக்கு நாம் பணிந்து விடக்கூடாது.

ஈரான் அணுசக்தி பிரச்சினையில் அமெரிக்காவுக்கு ஆதரவாக எடுத்த முடிவு பலத்த விவாதத்தை உருவாக்கி இருக்கிறது.

இந்தியாவின் ஆதரவைப் பெற்று அதன் மூலம் ஈரானை தனிமைப்படுத்த அமெரிக்காமுயற்சி செய்கிறது. எனவே தேசநலனைக் கருத்தில் கொண்டு ஈரான் பிரச்சினையை அனுகவேண்டும்.

இந்தியா,70 சதவீத மசகு எண்ணையை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் நிலையில் இருப்பதால் ஈரானுடன் நல்லுறவு வைத்துக் கொள்வதே சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்திய-பாகிஸ்தான் சமாதான முயற்சிகள் தீவிரவாதிகளின் தாக்குதலால் பாதிப்படையாது

## –காஷ்மீர் முதலமைச்சர்

(புதுடில்லி)

தீவிரவாதிகளின் தாக்குதல் காரணமாக, இந்திய-பாகிஸ்தான் சமாதான முயற்சி பாதிக்காது என்று காஷ்மீர்முதலமைச்சர் குலாம் நபி ஆசாத் கூறினார்.

இந்திராகாந்தியின் 88ஆவது பிறந்தநாள் பொதுக்கூட்டம் சிறிநகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய-பாகிஸ்தான் இடையே நடைபெற்றுவரும் சமாதான முயற்சியை முறியடிக்க சில தீவிரவாத சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. இதையொட்டி தீவிரவாதிகள் காஷ்மீரை தாக்கினார்கள்.

இதனால் இந்திய- பாகிஸ்தான் இடையே நடைபெற்று வரும் சமாதான முயற்சி எந்த வகையிலும் பாதிக்காது என அவர் தெரிவித்தார்.

## பீகார் சட்டசபைத்தேர்தலில்; இன்று வாக்கு எண்ணும் பணி

(பாட்னா)

பீகார் சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணும் பணி இன்று இடம்பெறுகின்றது.

மாலைக்குள் அனைத்து முடிவுகளும் வெளியாகி விடும் என தெரிவிக்கப்படுகிறது.

243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் மாநில சட்டசபைக்கு கடந்த மாதம் 18ஆம் திகதி தொடங்கி 4 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது.

இந்த 4கட்ட தேர்தலிலும் 47 சதவீத வாக்குகள் பதிவாகின.

வாக்கு எண்ணிக்கையின்போது வன்முறைசம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க 41 வாக்கு எண்ணும் மையங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மையத்திலும் மாநில பொலிசாருடன்துணை இராணுவ படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று பீகார் மாநில தலைமைச்செயலாளர் ஜி.எஸ்.காங் தெரிவித்தார்.



காங்கிரஸ் எம்.பிஅதிர்சவுத்ரி கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொல்கத்தாவில் கட்சியின் தொண்டர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் அரச பஸ்ஒன்று ஆர்ப்பாட்டக்காரர்களால் கொழுத்தப்பட்டது.


## 80 ஆவது பிறந்ததின வாழ்த்து



பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 80 ஆவது ஜெயந்தி விழாக்கொண்டாட்டம் 23.11.2005 அன்று கச்சேரி அருகாமையில் பஜனை மண்டபத்தில் காலைப் பூசையும், மதிய அன்ன தானமும் வழங்கப்படும் என்பதனை அறியத்தருகிறோம்.

நிர்வாகி,
த.வீரசிங்கம்,
பக்தர்கள்.

(6938)

## திருத்தம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
பெருந்தெருக்கள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
கேள்வி கோரல்

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானத்தை செயற்படுத்தும் திட்டங்களின் (STAART) கீழான சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC)நிதி வழங்கல்கள்

மேற்படி இரண்டு ஆரம்ப வரிகளும் 21.11.2005 அன்று வெளியான எமது பத்திரிகையின் 9ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டவேளை தவறவிடப்பட்டுள்ளன இதைச்சேர்த்து வாசிக்கவும்.

## CARITAS-HUDEC-JAFFNA VACANCY

**1.Field Officers (Construction)**
**Base Station:** Mullaitivu (2 Positions)
**Main duties:**
*Assist in all construction activities & give regular information to the Field Coordinator and provides detailed and exhaustive news of the evolution of operations.
* In collaboration with the administration to collect all the documents needed to establish the final reports to Caritas SEDEC (Purchase Orders, Good Received Notes, Quotations, Travelling claims details...)for construction.
* In case of emergency, the Field officer can negotiate with the suppliers and found a solution about the programme supplies.
* Manage the skilled labour (masons, carpenters etc.)
**Requirements:**
* NCT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field
* Experience in Implementation, Monitoring and Evaluating
* Strong interpersonal and liaison skills.
* Computer literacy in win word, Excel and email software.
* Experience in preparing Monthly Progress Activity Report and Sites Advancement Report
* Good team player
* Fluency in Tamil & English
**2.Logistic Officer**
**Base Station:** Vanni (1 position)
**Main duties:**
* plan & Manage all activities related to transportation & storage of materials & equipment as necessary for program implementation.
*Assist the purchasing Officer in preparing tender documents & receipt of quotation as necessary.
* Management of labor,transport, storage & distribution of all materials necessary for Program implementation according to Caritas Sri lanka guidelines
* Manage & maintain the warehouse according to professional standards & Hudec/Caritas guidelines
* Ensure all procedure regarding the warehouse
* **Requirements:**
* Have excellent knowledge in Logistic field with 2 years experience
* Strong interpersonal and liaison skills.
* computer literacy in Win Word, Excel and email software.
* planning and monitoring Logistics items.
* Knoweledge in the contract and supplying of stock
* Fluency in Tamil & English.
**3.Livelihood Officer**
**Base Station:** Mulaitivu (1position)
**Main duties:**
* Ensureahigh level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating.
* Ensure distribution of goods to selected beneficiaries
* Be in contact with the beneficiaries
* Organize training & workshops to build & improve capacities of the above mentioned staff.
* Work with project officers to regularly monitor & evaluate livelihood programs (fisheries, agriculture, samll enterprises).
**Requirements:**
* Demonstrate management experience with a special emphaon project management related to micro-enterprise and income generating activities.
* Experience using word processors, spread sheets & email.
* Knowledge & experience working with participatory approach
* Demonstrated knowledge in agriculture, fisheries & small enterprises sector
* fluency in Tamil & English
* Professionalism Integrity, interpersonal skills, goal focus
* Good communication skills

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnc background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by 30 **November 2005**

Father Jeyakumar
Caritas- Hudec,
14 Mathew s Road, Deogu Street,
jaffna.

or E-mail: hudec @ sltnet. lk

PLEAE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS.

# இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் வெற்றிபெறும் நம்பிக்கை உண்டு



## பயிற்சியாளர் மூடி

இந்தியாவிற்கெதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெறும் நம்பிக்கை தமக்கிருப்பதாக இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் ரோம் மூடி தெரிவித்துள்ளார்.

இலங்கையணியின் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தியாவுடன் நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் பின்னர் இலங்கையணி தமது பயிற்சிகளை (என்.சி.சி) மைதானத்தில் ஆரம்பித்துள்ளது. இந்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் பின்னர் மூன்று நாள் அங்கு தங்கியிருந்த முத்தையா முரளிதரனும் நேற்று பயிற்சிகளில் இணைந்துகொண்டார்.

ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஆரம்ப வீரராக களமிறங்காத அணித் தலைவர் மார்வன்அத்தப்பத்து டெஸ்ட் போட்டிகளில் வழமையான வரிசையிலேயே களமிறங்கத் தீர்மானித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ள சனத் ஜெயசூரியாவிற்குப் பதிலாக அவிஷ்க குணவர்த்தன, உப்புள் தரங்க ஆகியோர் விளையாடுவரென இலங்கையணி பயிற்றுவிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சகலதுறை ஆட்டக்காரரான ப்ஃவீஸ் மஹ்ரூப் வலது கையில்ஏற்பட்ட உபாதையினால் பயிற்சிகளில் கலந்துகொள்ளாத போதிலும் இன்னமும் ஓரிரு தினங்களில் பயிற்சியில் கலந்துகொள்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் சாமர கப்புகெதர சுழற்பந்து வீச்சாளர் சுஜீவ வீரக்கோன் ஆகியோர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்திய டெஸ்ட் தொடர் குறித்து கருத்து வெளியிட்ட இலங்கையணியின் உப தலைவர் சமிந்தவாஸ் தாம் எந்தச் சவாலையும் எதிர்கொள்ளக் கூடியநிலையிலிருப்பதாக தெரிவித்தார்.

# பெங்களூர் வெற்றி சென்னையிலும் தொடரும்

## ராவிட்



பெங்களூர் வெற்றி சென்னையிலும் தொடரும் என இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் ராவிட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்திய-தென்னாபிரிக்க அணிகளுககு இடையிலான மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் தொடர் சென்னையில் இன்று நடக்கிறது. இதற்காக இரண்டு அணிகளும் விமானம் மூலம் பெங்களூரில் இருந்து நேற்று முன்தினம் காலை சென்னை வந்து சேர்ந்தனர். ஆனால் தலைவர் ராவிட் மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோர் தாமதமாக மாலை 6.45 மணிக்கு பெங்களூரில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தனர். விமான நிலையத்தில் நிருபர்களிடம் ராவிட் கூறுகையில்; பெங்களூர் வெற்றி சென்னையிலும் தொடரும், இந்திய துடுப்பாட்ட வரிசையில் எந்த மாற்றமும் இல்லை என்றார்.

# மேற்கிந்தியத் தீவுக்கு தொடரும் சோகம் அவுஸ்திரேலியாவுக்கு 9 விக்கெட் வெற்றி



கோபாட்டில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலியா ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.இதன் மூலம் மூன்று போட்டிகொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற ரீதியில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலிய வீரர்களின் அனல் பறக்கும் பந்து வீச்சில் மே.தீவு 149 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்சை இழந்தது. இதையடுத்து ஆடிய அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்சில் 406 ஓட்டங்கள் குவித்தது.

இதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஆடிய மேற்கிந்தியத்தீவு அணி நான்காவது நாள் ஆட்டநேர முடிவில் 334 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்க ளையும் இழந்தது. இதனால் அவுஸ்திரேலிய அணிக்கு78 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

நேற்று கடைசி மற்றும் ஐந்தாவது நாள் ஆட்டம் நடந்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக ஹைடனும், மைக்கேல் ஹீசேவும் களமிறங்கினார்கள். வெற்றிக்கு ஒரு ஓட்டம் தேவை என்ற நிலையில் ஹைடன் ஆட்டமிழந்தார். அவர் 46 ஓட்டங்கள் எடுத்தார். முடிவில் அவுஸ்திரேலியா 26.1 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 78 ஓட்டங்கள்எடுத்து வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் வென்றது. இரு அணிகளுக்கிடையேயான கடைசி டெஸ்ட் வரும் 25 ஆம் திகதி அடிலைட் நகரில் தொடங்குகிறது.

# சென்னை ஒரு நாள் போட்டி; நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகிக்கும்


மைக் ஆர்தர்

சென்னையில் நடைபெறும் மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகிக்கும் என தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் மைக் ஆர்தர் கூறியுள்ளார். இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவது போட்டி சென்னையில் பகலிரவாக இன்று நடைபெறுகிறது.

இதுவரை நடைபெற்ற இரண்டு போட்டிகளில்இரு அணிகளும் தலா ஓர் ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளன. இந்நிலையில், சென்னை போட்டி ரசிகர்களிடம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்க வீரர்கள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சேப்பாக்கத்தில் பயிற்சி மேற்கொண்டனர். அதற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் அணியின் பயிற்சியாளர் மைக் ஆர்தர் கூறியதாவது, சென்னைப் போட்டியில் நாணயச் சுழற்சி முக்கியப் பங்காற்றும். ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக இருககும் எனத் தெரிகிறது. அதில் 300 ஓட்டங்களைக் குவித்தால் சிறப்பாக இருக்கும். ஆனாலும் அங்கு நிலவும் பருவ சூழ்நிலை, மைதானத்தின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே வியூகம் அமைப்போம்.

இந்திய அணியில் துடுப்பாட்ட வரிசை சிறப்பாக உள்ளது. ஹைதராபாத்தில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் ஐந்து விக்கெட்டுக்கு 35 ஓட்டம் என்ற நிலையிலிருந்து 249 ஓட்டங்களைக் குவித்ததிலேயே இந்திய துடுப்பாட்ட வரிசையின் உண்மை நிலையை அறிய முடிகிறது. அதுமாதிரியான ஆட்டம் அணிக்கு எப்போதும் உதவும் என்றார்.

# இங்கிலாந்தின் கோரிக்கை நிராகரிப்பு



இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை அகமதாபாத், நாக்பூர், மும்பாய் போன்ற நகரங்களிலும் ஏழு ஒருநாள் போட்டிகளை ஏனைய சிறுநகரங்களிலும் நடத்த இந்தியா தீர்மானித்திருப்பினும் ஒருநாள் போட்டிகளை ரசிகர்கள் நிறைந்த பெரும் நகரங்களில் நடத்தப்படுவதை இங்கிலாந்து அணி விரும்புவதாக தெரிவித்துள்ளது. இதன்காரணமாக இது தொடர்பாக இன்னும் இருவாரங்களில் கலந்தாலோசனை நடைபெறும் என்று தெரிவிக்கப்படுவதுடன் போட்டி நடைபெறும் இடங்கள் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்து அணி எட்டு வாரகால சுற்றுப் பயணமான பாகிஸ்தான் போட்டித்தொடரை முடித்துவிட்டு வரும் பெப்ரவரியில் இந்தியா செல்லவுள்ளது.

இந்தியா ஏழு ஒருநாள் போட்டிகளை கோவா, இந்தூர், குவாஹட்டி, பாரிதாபாத், கட்டாக் கொச்சின் விசாகபட்டணம் ஆகிய சிறு நகரங்களில் நடத்தவும், டெஸ்ட் போட்டிகளுக்கு முன்பு ஜம்சப்பூர், அகர்தலா போன்ற நவீன விடுதிகள் குறைந்த நகரங்களில் பயிற்சிப் போட்டிகளையும் நடத்த திட்டமிட்டுள்ளது. எனினும் இங்கிலாந்து அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. எனினும் பின்தங்கிய மாநில மக்களும் சர்வதேச போட்டிகளைப் பார்க்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதால் போட்டி நடைபெறும் குறித்த இடங்களை மாற்றுவது என்ற கேள்விக்கே இடமில்லை என கௌதம்தாஸ் குப்தா தெரிவித்துள்ளார்.

# தென்னாபிரிக்க அணியினர் சேப்பாக்கத்தில் பயிற்சியில்



இந்தியாவுடன் இன்று நடை பெறும் மூன்றாவது ஒரு நாள் போட்டியில் பங்கேற்கும் தென்னாபிரிக்க அணியினர் சேப்பாக்கம் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை பயிற்சி மேற்கொண்டனர்.

கறுப்பு இனத் தலைவர் மண்டேலா விடுதலையான பின் 1991 இல் முதன் முதலாக இந்தியாவில் ஒரு நாள் போட்டியில் விளையாடியது தென்னாபிரிக்க அணி. அதன் பின் தற்போது இந்தியாவில் இந்திய அணியுடன் விளையாடி வருகிறது. சென்னையில் விளையாடுவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

ஞாயிற்றுக்கிழமை காலை சென்னை வந்தடைந்த அணியினர், பிற்பகலில் சேப்பாக்கத்தில் பயிற்சி மேற்கொண்டனர்.



# பாகிஸ்தான் வலுவான ஓட்டக்குவிப்பு; பைசலாபாத்தில் தடுமாறுகிறது இங்கிலாந்து

பைசலாபாத்தில் நடைபெற்றுவரும் இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வலுவான ஓட்ட எண்ணிக்கை ஒன்றைப் பெற்றுள்ளது.

போட்டியின் முதல் நாளில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி இரண்டாம் நாளான நேற்று 462 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் இன்சமாம் 109 ஓட்டங்களையும் அப்ரிடி 92 ஓட்டங்களையும், முகமட் யுசுப் 78 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹார்மிசன் மூன்று விக்கெட்டுக்களையும், ஹைறல்ஸ், ஹொக்காட் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிசை ஆடும் இங்கிலாந்து அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ரெஸ்கொதிக் 48 ஓட்டங்களையும், ஸ்ரோஸ் 15 ஓட்டங்களையும். வோகன் இரண்டு ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது பெல், பீற்ரசன் முறையே 36, நான்கு ஓட்டங்களைப் பெற்று களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் நவீட் உல்கசன் இரண்டு விக்கெட்டுக்களையும், சமி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## சிந்தனைக்கு



விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 22.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எதிர்பார்ப்பு!

இன்று பல தரப்பிடமும் உள்ள எதிர்பார்க்கை சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமா? யுத்த நிறுத்த உடன்பாடு நீடிக்குமா? என்பதே ஆகும். இது தனியாக இலங்கை வாழ் மக்களிடம் மட்டுமல்ல, இனப்பிரச்சினையில் அக்கறை கொண்ட அனைவரிடமும் உள்ள முக்கியமானதொரு கேள்வியாகும்.

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் மகிந்த ராஜபக்ஷவின் தெரிவானது மிகவும் முக்கியத்துவமிக்கதாகும். சிறிலங்காவை இதுவரை சிங்களத் தலைவர்களே ஆட்சி செய்தாலும், அவர்கள் தாம் தம்மை இலங்கைத் தீவின் தலைவர்கள் என்றே கூறி வந்தார்கள். ஆனால் மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்து அவ்வாறு இல்லை. அவர் தனியாகச் சிங்கள மக்களின் தலைவரே.

முன்னைய சிங்களத் தலைவர்கள் எவருமே இலங்கையின் தேசியத் தலைவராக இருந்ததில்லை என்பது தெளிவானதொன்று. ஆயினும் – அவர்கள் தம்மை இலங்கையின் தலைவர்கள் என்றே கூறிக்கொள்வதற்கான சூழ்நிலை ஓரளவேனும் இருந்தது. ஏனெனில் அவர்களை ஆதரித்து தமிழ் மக்கள் வாக்களிக்காது விடினும், தமிழ் மக்கள் ஆதரித்தவர்களில் சிலராவது அவர்களை ஆதரித்த துண்டு.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ விடயத்தில் அவ்வாறு இல்லை. அவரைத் தனியாகச் சிங்கள மக்களே தெரிவு செய்துள்ளார்கள். மகிந்த ராஜபக்ஷவை ஈ.பி.டி.பி, கருணா குழு போன்றவைஆதரித்த போதும் தமிழமக்கள் இவர்களின் பேச்சுக்களைக் கருத்திற் கொள்ளவில்லை. இதனை வடக்கிலும், கிழக்கிலும், மகிந்த ராஜபக்ஷவிற்கு கிடைக்கப் பெற்ற மிக மிகச் சொற்பமான வாக்குகளில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறாக ஒரு புறத்தில் - சிங்கள மக்களின் தலைவராகவும், மற்றொரு புறத்தில் ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமய போன்ற அதி தீவிரவாத பௌத்த சிங்கள அடிப்படை வாத கட்சியாளர்களின் நிர்ப்பந்தங்களுக்கும் உட்பட்டவரான மகிந்த ராஜபக்ஷ தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வாய்ப்புள்ளதா என்பதேகேள்வியாகும்.

மகிந்த ராஜபக்ஷவும் சரி,அவரது ஆதரவு சக்திகளும் சரி தேர்தலிற்கு முன்பும் சரி, வெற்றியின் பின்பும் சரி சமாதானப் பேச்சுவார்த்தையையும், யுத்த நிறுத்தத்தையும் பேணத்தக்க வரையிலான கருத்துக்களை வெளியிட்டதாக இல்லை. அதாவது சமாதான முயற்சிகள், யுத்த நிறுத்தம் என்பனவற்றிற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலேயே அவர்களின் பேச்சுக்கள் உள்ளன.

குறிப்பாக நோர்வே அரசின் பங்களிப்புக் குறித்து மகிந்த ராஜபக்ஷவின் முடிவு சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும், யுத்த நிறுத்தத்திலும், வகிக்கப் போகும் பங்கு முக்கியமானதாகும். ஏனெனில் நோர்வே அரசு தற்போதைய சமாதான முயற்சியின் மையமாக இருந்துள்ளது. ஆனால் எதிர்காலத்தில் நோர்வேயின் பங்கு குறித்து மகிந்தராஜபக்ஷ கருத்துக்கள் இதுவரை வெளிப்படையானவையாக இல்லை.

இந் நிலையில் கடந்த காலத்தில் நோர்வேயின் பங்குப் பணிகள் குறித்து கடும் ஆட்சேபங்களையும், கண்டனங்களையும், வெளியிட்டு வந்த ஜே.வி.பி யினர் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினரின் கருத்துக்களை மகிந்த ராஜபக்ஷ முழுமையாக உள்வாங்குவாரேயானால் நோர்வேயை வெளியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றே எதிர்பார்க்கலாம்.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய கருத்துக்களும், இதனையே பிரதிபலிப்பதாக உள்ளது. இதுவரையில் மகிந்த ராஜபக்ஷ நோர்வேயை ஏற்பாட்டாளர் நிலையில் இருந்து விடுவிப்பதாக வெளிப்படையாகக் கூறாது விட்டாலும், நோர்வேயின் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கவும் இல்லை. சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்குமாறு அழைப்பு விடுவதாகவும் இல்லை.

ஆகையினால் சமாதான முயற்சிகள் தொடர்பாக உடனடி நடவடிக்கைக்கு மகிந்தராஜபக்ஷ தயாராக இல்லை என்பது மட்டுமல்ல, நோர்வே ஏற்பாட்டாளரைக் கொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் தயாராக இல்லை என்பதையுமே வெளிப்படுத்துவதாய் உள்ளது. மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் தெரிவித்த சில கருத்துக்களும் இதனையே வலியுறுத்துவதாகவுள்ளது. குறிப்பாக, சமாதான முயற்சிகளுக்காகப் பல தரப்பை இணைத்துக் கொள்ளுதல், ஆசிய நாடுகளுக்கு முதன்மை அளித்தல் என்பன இதில் முக்கியமானவையாகும்.

இந் நிலையில் சமாதான முயற்சிகளும், யுத்த நிறுத்தமும் கேள்விக்குள்ளாகியுள்ளதெனக் கூறுதல் தவறாகமாட்டாது. ஏனெனில் நோர்வே வெளியேற வேண்டியதொரு நிலை உருவாகுமானால் நோர்வேயின் தலைமையில் இயங்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் வெளியேற வேண்டி வரும்.

இதனால், தற்பொழுது நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் யுத்த நிறுத்த உடன்பாடும் மேலும் நெருக்கடிக்குள்ளாவது தவிர்க்க முடியாது போய்விடும். மகிந்த ராஜபக்ஷ யுத்த நிறுத்த மீள் பரிசீலனை பற்றியும், ஆசிய நாட்டு ஏற்பாட்டாளர்கள் பற்றியும் பேசலாம். ஆனால் நோர்வே வெளியேறும் பட்சத்தில் ஏற்படப் போகும் வெ[illegible]ம் நிரப்பப்படும் முன்னரே சமாதான முயற்சிகளை மூழ்கடித்து யுத்தம் ஆரம்பித்து விடும்.

# மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் யாழ்.குடாநாட்டில் பூர்த்தி!

(வலிகாமம்)

தமிழீழ தேசிய மாவீரர் எழுச்சி வாரத்தை அனுஷ்டிப்பதற்கு யாழ். மாவட்டம் தயாராகி பல ஏற்பாடுகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன.

யாழ். மாவட்டத்தின் நான்கு பெரும் பகுதிகளான வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய கோட்ட மட்டங்களில் அந்தந்தக் கோட்டங்களின் பொது அமைப்புக்கள் மாவீரர் எழுச்சி வாரத்தை அனுஷ்டிப்பதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்து முடித்துள்ளன.

பிரதான வீதிகள், முக்கிய சந்திகள் மற்றும் நகரப் பகுதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் நிலையங்கள் அலங்கரித்தும், ஆங்காங்கே மாவீரர்நாள் என்று எழுதப்பட்ட பதாகைகளைக் கட்டியும் - முக்கிய இடங்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்றவற்றில் மாவீரர் நினைவுருவப் படங்களை வைத்தும் இவ்வாரத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று மாவீரர் வாரத்தை முன்னிட்டு மாவீரர்களின் ஞாபகார்த்தமாக வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய கோட்டங்களிலுள்ள முக்கிய வைத்தியசாலைகளில் இரத்ததானங்களை செய்தல், வைத்தியசாலைகள் உட்பட முக்கிய பொதுஇடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளல், மாவீரர் ஞாபகார்த்த மரநடுகைத் திட்டங்களை மேற்கொள்ளல், மாவீரர் பெற்றோர்களைக் கௌரவித்தல் போன்ற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்று பொது அமைப்புக்களை இணைக்கும் இணைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (37)

# தமிழீழ தேசிய மாவீரர்நாளை முன்னிட்டு கட்டணமின்றி ரி.ரி.என் சிறப்பு நிகழ்ச்சிகள்

தமிழீழ தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு ரி.ரி. என் தொலைக்காட்சி தனது சிறப்பு நிகழ்ச்சிகளை மூன்று நாட்களுக்கு கட்டணமின்றி ஒளிபரப்பு செய்கிறது.

இது தொடர்பாக ரி.ரி. என் நிர்வாகம் வெயிட்டுள்ள அறிக்கையில்;

எமது தேசத்தின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து விட்ட அற்புதமான தியாகிகளின் நினைவு சுமந்து ரி.ரி. என். தமிழ் ஒளியில் தமிழீழ தேசிய மாவீரர்நாள் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகவுள்ளன.

தமிழீழ தேசிய பேரெழுச்சி நாளான மாவீரர் நாளை முன்னிட்டு 25, 26, 27ஆகிய திகதிகளில் ரி.ரி.என் தமிழ் ஒளியில் மாவீரர் சிறப்பு நிகழ்ச்சிகள் தாய்மடியில் இருந்து நேரடியாக ஒளிபரப்புச்செய்யப்படவிருக்கிறது.

தேசிய பேரெழுச்சி நிகழ்வுகளுடன், புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ்மக்களின். எழுச்சி நிகழ்வுகளையும் உள்ளடக்கி உணர்வு பூர்வமான நிகழ்ச்சிகள் ரி.ரி. என் இல் ஒலிபரப்பாகவுள்ளன.

25ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரையான மூன்று நாட்களும், கட்டணங்கள் எதுவும் இன்றி உங்களின் தமிழ்ஒளி உங்களின் பார்வைக்கு வலம் வருகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.க பாராளுமன்றக் குழுக் கூட்டம் இன்று தேர்தல் முடிவு குறித்து ஆராயப்படும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இதன் போது சனாதிபதித் தேர்தல் முடிவுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். இந்தக் கூட்டத்தின் போது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமது கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தனது பதவியை ராஜினாமாச் செய்தது சனாதிபதித் தேர்தல் தோல்வியினால் அல்ல எனவும் அவர் தன்னுடைய வர்த்தக நடவடிக்கையை முன்னெடுக்கும் நோககில் பதவியை ராஜினாமாச் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடி கலந்துரையாடவுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மேற்கொள்ளும் தீமானத் திற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவிப்பார் என்றும் அவர் கூறினார்.

# பங்குச்சந்தையில் நேற்றும் வீழ்ச்சி தொடர்ந்தும் வீழும் எனவும் எச்சரிக்கை

சிறிலங்காவின் பங்குச்சந்தை வர்த்தகம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருகிறது. நேற்று திங்கட்கிழமை பங்கு வர்த்தகத்தின் சுட்டெண்கள் கடந்த வெள்ளிக்கிழமையைப்போல் எட்டுவீதம் வரைவீழ்ச்சியடைந்து இருந்தது.

அனைத்து கொழும்பு பங்கு வர்த்தகத்தில் சுட்டெண்கள் வீழ்ச்சி 166 புள்ளிகளாகவும் மிலங்கா பங்கு வர்த்தக சுட்டெண்கள் 250 புள்ளிகளாகவும் வீழ்ந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்கு வர்த்தக வீழ்ச்சியானது 171புள்ளிகளாகவும் 266புள்ளிகளாகவும் இருந்தது.

சிறிலங்காவின் புதிய அரசியல் மாற்றங்களால் சிறிலங்காவின் சந்தை கடும் வீழ்ச்சியை சந்திக்க நேரிடும் என்று சர்வதேச பங்கு வர்த்தக இதழான வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்திஒன்றையும் வெளியிட்டுள்ளது வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தி மேலும் தெரிவிக்கையில்;

சிறிலங்காவின் பங்கு வர்த்தகம் எதிர்வரும் நாட்களிலும் ஐந்து முதல் பத்து வீதமான வீழ்ச்சியை சந்திக்கக்கூடும்.

பங்கு வர்த்தக நிறுவனத்தைச்சேர்ந்த ஆர்.முரளிதரன் என்பவர் கருத்து தெரிவிக்கையில்,

அமைதி முயற்சிகளை மகிந்தராஜபக்ஷ தொடங்கினால் நிலைமை வேறாக மாறும். ஆனால் யுத்தத்தை தொடங்கினால் இன்னும் மோசமாக பங்கு வர்த்தகம் விழ்ச்சியடைந்துவிடும் என்று எச்சரித்தார்.

சர்வதேச சந்தையில் சிறிலங்காவின் பண மதிப்பு ஒரு அமெரிக்க டொலருக்கு ரூ99 ஆக இருந்தது. கடந்த வெள்ளிக்கிழமையன்று மகிந்தராஜபக்ஷ தெரிவான நிலையில் 101.94ஆக இருந்தது. இந்த ஆண்டு இறுதி வரை இந்த மதிப்பானது ரூ.102.50இற்கும் ரூ.103இற்கும் இடையில் இருக்கும் என்றும் வர்த்தக நோக்கர்கள் கூறுகின்றனர் என வோல்ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தி தெரிவிக்கிறது.

# இ.தொ.காங்கிரஸ் மீண்டும் ஐ.ம.சு.முன்னணியில்?

சிறிலங்காவின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீண்டும் இணையக்கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சனாதிபதித்தேர்தல் வரை அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்பு வகித்த இ.தொ.கா.தேர்தலில் ரணில் வக்கிரமசிங்கவை ஆதரித்து அமைச்சுப்பொறுப்புக்களிலிருந்து வெளியேறினர்.

இந்த நிலையில் மலையகத்தமிழர்களின் நலனைக் கருத்திற் கொண்டு மீண்டும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் கூடிய அக்கட்சி உயர்நிலைக்கூட்டத்தில் விவாதித்துள்ளது. இருப்பினும் அமைச்சரவையில் மீண்டும் சேருவது தொடர்பாக மலையக மக்களுடன் ஆலோசிக்கப்பட்ட பின்னர் அறிவிக்கப்படும் என்று அக்கட்சியின் பேச்சாளர் கே.மூர்த்தி கூறினார். அதேநேரத்தில் இ.தொ.காவை மீண்டும் அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

மலையகத்தில் ரணில் முழுமையான வெற்றி பெறுவதற்கு உதவியாக இருந்தவரை எப்படி மீண்டும் கூட்டமைப்பில் இணைப்பது? என்றும் கூட்டமைப்பிற்குள் கேள்விகள் எழுந்துள்ளன. ஆனால் சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் மகிந்தராஜபக்ஷவுடன் இ.தொ.கா.வை மீண்டும் இணைத்துக்கொள்வது தொடர்பாக விவாதித்து வருவதாகவும் தெரிகிறது.

# சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் தீவிர முயற்சியில் மேற்குலக ராஜதந்திரிகள்

சிறிலங்காவின் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதைத் தொடர்ந்து, அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்குத் தேவையான முயற்சிகளில் மேற்குலக ராஜதந்திரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

கிழக்கில் அதிகரித்து வரும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வர அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் மீள ஆரம்பிக்க வேண்டுமென டோக்கியோ நிதி உதவி மாநாட்டில் இணைத் தலைமை வகித்த அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் என்பன கருதுகின்றன.

குறிப்பாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரது அரசியல் கூட்டணியினரும் நோர்வேக்கு எதிராக பகிரங்கமாக முன்வைத்துவரும் விமர்சனங்களை நிறுத்திக்கொள்ள வேண்டுமென ராஜதந்திரிகள் விரும்புகின்றனர். இத்தகைய விமர்சனங்கள் தொடருமாயின் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராக செயற்பட முடியாது என நோர்வே தெரிவித்துள்ளது.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரது கூட்டணியினரும் தேர்தலின் போது அரசியல் இலாபங்களுக்காகவே நோர்வேயை விமர்சித்து வந்தனர். தற்போது தேர்தல் முடிவடைந்திருப்பதால் நோர்வேக்கு எதிரான பரப்புரைகள் கைவிடப்படுமென தாம் நம்புவதாக மேற்குலக ராஜதந்திரி ஒருவர் ஐ.ஏ.என்.எஸ். செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு இதுவே தக்க தருணம் எனக் கருதும் மேற்குலக ராஜதந்திரிகள், தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களைச் சந்திக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் புதிய அரசில் விடுதலைப்புலிகள் நம்பிக்கை வைக்கும் விதத்தில் புதிய சனாதிபதி செயற்பட வேண்டும் எனவும் மேற்கு நாடுகள் விரும்புவதாகவும் அந்த ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாகவும் இணையத்தளம் மேலும் கூறியுள்ளது.

## அரசியலில் ஈடுபடும் எண்ணம் சந்திரிகாவுக்கு இல்லையாம்

இனிவரும் காலங்களிலும் அரசியலில் ஈடுபடும் எண்ணம் எனக்கு துளிகூட இல்லை. அரசியலில் ஈடுபடாது பொதுநலப் பணியில் ஈடுபட உத்தேசித்துள்ளேன் என்று சிறிலங்காவின் முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நான் ஓய்வுபெற்று இந்த நாட்டின் குழந்தைகளின் கல்வி, பாதுகாப்பு விடயங்களில் அக்கறை காட்ட விரும்புகின்றேன் என்றார்

## பிற்போடப்பட்டது

பாண்டியன்குளத்தில் வரும் 23ஆம் திகதி நடைபெறவிருந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும், யோகபுரம் மல்லாவியில் 24ஆம் திகதி நடைபெறவிருந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக துணுக்காய் பாண்டியன்குளப் பிரதேசப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## வடக்கு..

காவின் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதனால் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என்றும், இக்கடற் பகுதி சற்று கொந்தளிப்பாக இருக்கும் என்றும் வளி மண்டல திணைக்களம் அறிவித்துள்ளது.

## புதிய..

இதுவரை எதுவித மாற்றமும் இல்லை.புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்குமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். எங்களது தேர்தலுக்குப் பின்னைய செயற்பாடுகள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள இரண்டு அல்லது மூன்று நாட்களாகும்.

இனறு செவ்வாய்க்கிழமை அமைச்சுப் பதவியேற்பு விழா நடைபெற்றாலும். ஜே.வி.பி. அதைப் புறக்கணிக்கும் என்றார் விஜித ஹேரத.

இருப்பினும் ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ஷவுக்கு ஊடகத்துறை அமைச்சுப்பொறுப்பு அளிக்க மகிந்தராஜபக்ஷ அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அண்மையில் சுதந்திரக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறியிருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் ஓராண்டுக்கும் மேலாக அமைச்சுப்பொறுப்பு வகித்த ஜே.வி.பி. சந்திரிகா முன்வைத்த ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை எதிர்த்து அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது.

சானாதிபதித் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராக போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு 12 நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவு தெரிவித்தது.

தற்போது மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று சனாதிபதியாகியுள்ள நிலையில் மீண்டும் அமைச்சரவையில் இணைவது தொடர்பாக அக்கட்சிக்குள் கடும் விவாதம் நடைபெற்று வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ரட்ணசிறி..

. பதவிவகித்த காலத்தில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மிகக் கடுமையாக எதிர்த்து வந்தவர் இவர். ஐக்கிய இலங்கைக்கட்டமைப்பில் ஒரே ஒரு இராணுவம் தான் இருக்க முடியும். இன்னொரு இராணுவம் இருப்பதைப் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

கடந்த 1999ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி வரை சிறிலங்காவின் பிரதமராக இவர் பதவி வகித்தவர். 1960ஆம் ஆண்டு அரசியலில் நுழைந்த ரட்ண சிறி விக்கிரமநாயக்க 1962ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினராக இணைந்தார். களுத்துறை மாவட்டம் ஹொறணை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர் 1965 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினரானார். 1977ஆம் ஆண்டு அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரானார்.

முன்னதாக சிறிலங்காவின் பிரதமராக அநுராபண்டாரநாயக்கவை நியமிப்பது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு முடிவெடுத்திருந்தது.

ஆனால் மகிந்தராஜபக்ஷவுக்கும் சந்திரிகா மற்றும் அநுராபண்டாரநாயக்கவுக்கும் இடையேயான முரணபாட்டை அடுத்து பண்டா குடும்பத்தின் கடைசி அரசியல் வாரிசான அநுராவுக்குப் பிரதமர் பதவியை அளிக்காமல் மகிந்தராஜபக்ஷ ஒதுக்கி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டமை சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளதாகக் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் பின்னிரவு வரை கட்சியின் மூத்த உறுப்பினரும் பொதுச்செயலாளருமான அமைச்சர் டி.எம்.ஜெயரட்ணவே புதிய பிரதமரென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதி நேரத்தில் அப்பதவி ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிற்கு வழங்கப்பட்டது.

இச் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தியையும், சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## நெடுந்தீவில்...

வீதியில் சென்றவர்களை தாக்கியும் வர்த்தக நிலையங்களை அடித்துநொருக்கியும் தமது அராஜகங்களைப்புரிந்துள்ளதுடன் மக்களை வீடுகளை விட்டு வெளியே றவிடாது கண்மூடித்தனமாக தாக்கியும் உள்ளனர். இவ்வாறான தாக்குதல் களால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகச் சுட்டுக்காட்டியே அப்பகுதி மக்கள் இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர். (33)

## நெடுந்தீவில்கடற்படை...

இதற்குள் இருக்கும் மகாவித்தியாலய மைதானத்தில்தான் உலங்கு வானூர்திகள் இறங்குகின்றன.

கைது செய்யப்பட்ட இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரைத் தெரியவில்லை. போக்குவரத்து தடை செய்யப்பட்ட பகுதிக்குள்ளேயே கடற்படை முகாமும், ஈ.பி.டி.பியின் முகாமும், சிறிலங்கா பொலிஸ் நிலையமும் அமைந்துள்ளன. நெடுந்தீவு மாவலித்துறையில் மாவீரர் நினைவுப் பந்தல் அமைப்பதில மக்கள் ஈடுபட்டபோது அதனைத்தடுக்க முனைந்த படையினர் மக்களை அச்சுறுத்த துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதன்போது இரு இளைஞர்களைக் கைது செய்தனர்.

கடற்கொந்தளிப்புக் காரணமாக நெடுந்தீவு மக்கள் குறிகாட்டுவானுக்கு போக்குவரத்து செய்ய படகுச் சேவை நடைபெறத் திட்டமில்லாதபோதும் கூட படகுப் பயணத்தைப் படையினர் தடுத்துள்ளனர்.

நெடுந்தீவில் தற்போதைய போர்நிறுத்த காலத்திலேயே கடற்படையினர் முகாமமைத்தனர்.

இப்போது அங்கு பெரும் நெருக்கடி நிலையை அவர்கள் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை குறித்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் அருகில் உள்ள சிறிய முகாம் ஒன்றிற்குச் சென்றுவிட்டு திரும்பிவந்து கொண்டிருந்தபோது அவருக்குப் பின்னால் ஈருருளியில் வந்ததாகக் கூறப்படும் மூவரினால் கடத்திச் செல்லப் பட்டிருக்கலாமென கொழும் பிலுள்ள கடற்படைப் பேச்சாளர் கப்டன் ஜயந்த பெரேரா கூறியுள்ளார்.

## வன்னிப்பகுதியில்...

றப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். குளத்தின் நிலையை தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகள் கண்காணித்து வருகின்றனர்.

அக்கராயன் குளத்தின் நீர்க்கொள்ளவுக்கும் அதிகமான நீர் நிறைந்துள்ளது. இதனால் குளத்தின் கீழ்ப்பகுதி (அக்கராயன் முறிகண்டி வீதியை அண்டிய) மண் அணைக்கு மேலாக நீர் மேவிப்பாய்ந்து கொண்டிருக்கிறது. இதனால் அந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இவ்வாறு குளத்து நீர் மண் அணைக்கு மேலாக மேவிப் பாய்வதால் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளம் வரையான அளவில் நீர் பாய்ந்தோடிக்கொண்டிருக்கிறது. இதனால் அதனை அண்டிய பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்று அக்கராயன் மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேநேரம் அக்கராயன் எட்டாம் கட்டை பாலன்குளம் முழுமையாக நீர் நிறைந்துள்ளது. இந்தநிலையில் குளத்தை நோக்கி தொடர்ந்தும் நீர் வந்து கொண்டிருக்கிறது. குளத்தின் கொள்ளளவுக்கும் அதிகமான நீர் வருவதால் குளத்தின் மண் அணை (பண்ட்)க்கு மேலாக நீர் மேவிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இதனை கட்டுப்படுத்தும் முகமாக அப்பகுதி மக்களும் அக்கராயன் பிரதேச காவல்துறையினரும் இணைந்து மண் மூட்டைகள் அமைத்து மேவிப் பாயும் நீரைக் கட்டுப்படுத்தினர். எனினும் அதனையும் மீறி தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது.

மணியங்குளம் நீர் நிறைந்ததால் மண் அணையை மேவிப்பாய்ந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு நீர் மேவிப் பாய்வதால் மணியங்குளம் மக்கள் இடம்பெயர்ந்து மணியங்குளம் இரண்டாம் பாடசாலை, பொதுநோக்கு மண்டபம் ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மழை தொடருமானால் இந்தக் குளங்கள் உடைப்பெடுத்துவிடும் நிலை உருவாகிவிடும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை, கோணாவில் வன்னேரிக் குளம், அக்கராயன் ஆகிய வீதிகளில் வெள்ளம் அதிகரித்துள்ளதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பிரிவுக்குட்பட்ட அனைத்துக் குளங்களும் நீர் நிரம்பி வான் பாய்வதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டப்பட்டுள்ளனர்.

என்றுமில்லாத வகையில் மூன்று நாட்கள் மாத்திரம் பெய்த பெரு மழையால் குளங்களின் நீர் மட்டம் சடுதியாக உயர்ந்துள்ளது. குளங்களில் இருந்து வெளியேறுகின்ற நீரைவிட அதிகமான நீர்வந்து கொண்டிருக்கிறது.

எனவே, முத்துஐயன்கட்டு நீர்ப் பாசன பிரிவுக்குட்பட்ட குளங்களின் கீழ் குடியிருக்கின்ற மக்கள் உசார் நிலையில் இருக்க வேண்டும். எந்நேரமும் எந்தக் குளங்களும் உடைப்பெடுக்கலாம் எனவும் முத்து ஐயன்கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் கோ. சிவநாதன் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழையால் வன்னி எங்கும் வெள்ளநீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. ஏ-9 வீதியில் ஆனையிறவுக்கு அண்மையில் உள்ள உமையாள்புரம் பகுதியில் வீதியை ஊடறுத்து வெள்ளம் பாய்ந்து வருகிறது. இதனால் அதனூடான போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பரந்தன், ஆனையிறவு, இயக்கச்சி உட்பட்ட பல்வேறு பகுதிகளில் வீதியை ஊடறுத்து வெள்ளம் பாய்ந்து வருகின்றபோதும் உமையாள் புரத்திலேயே அதிகளவான வெள்ளம் பாய்ந்து வருகிறது.

நேற்றுக்காலை முதல் வீதியை ஊடறுத்துப் பாய்ந்து வரும் வெள்ள நீர் தொடர்ந்தும் மழை பெய்வதால் அதிகரித்து வருகிறது. இந்த நிலை தொடருமானால் இவ் வீதியூடான போக்குவரத்து தடைப்படும் அபாயநிலை உருவாகியுள்ளது.

இதேவேளை தொடர் மழையால் பரந்தன், முல்லை வீதியில் ஐந்துக்கும் அதிகமான இடங்களில் பெரு வெள்ளம் பாய்வதுடன் பதினைந்துக்கும் அதிகமான இடங்களில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்கிறது.

பரந்தன் முதல் முல்லைத்தீவு வரையான வீதியில் விசுவமடு, மாணிக்கப்பிள்ளையார் கோவிலடியிலும் , றெட்பானா, தேராவில் பகுதியிலும் உடையார்கட்டு, மூங்கிலாறு, தேவிபுரம், மஞ்சள்பாலம், மந்துவில், வட்டுவாகல் ஆகிய இடங்களில் என்றுமில்லாதவாறு வெள்ளம் பாய்ந்து வருகிறது. இதனால் போக்குவரத்துச் செய்வது ஆபத்தான நிலையை அடைந்துள்ளது.

மேல் குறித்தபகுதிகளில் நான்கு அடிக்கும் அதிகமான உயரத்தில் மிகவேகமாக வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது. வெள்ளநீரின் வேகம் காரணமாக வீதியில் அரிப்பு ஏற்பட்டு பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளது.

தேவிபுரம் மஞ்சள் பாலத்துக்கருகில் பாய்கின்ற வெள்ளத்தைக் கடந்து செல்ல முற்பட்ட பாரஊர்தி வீதியை விட்டு விலகியதால் வெள்ளத்தில் சிக்கியுள்ளது. இவ்வாறு வெள்ளம் பாய்கின்ற பகுதிகளில் வீதி மிகமோசமாகச் சேதமடைந்துள்ளது.

தட்டுவன்கொட்டி மீள்குடி யேற்றக் கிராமத்துக்குச் செல்கின்ற தரைவழிப் பாதையில் இரண்டு இடங்களில் பெருவெள்ளம் பாய் கிறது. இதனால் தட்டுவன் கொட்டி கிராமத்துக்கு செல்ல முடியாதநிலை உருவாகியுள்ளன. அத்துடன் வயல் நிலங்கள் பெரு வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கிளிநொச்சி· இரத்தினபுரம், கிளிநொச்சி -வட்டக்கச்சி, கரடிப்போக்கு, உருத்திரபுரம், பரந்தன், குமரபுரம்,புதுமுறிப்பு, கோணாவில் ஆகிய பகுதிகளில் மழை வெள்ளம் பிரதான வீதிகளை ஊடறுத்துப் பாய்ந்து வருகிறது.

கிளிநொச்சி இரத்தினபுரம், கிளிநொச்சி, மருதநகர், பரந்தன் குமரபுரம் எட்டாம், ஒன்பதாம் ஒழுங்கைகளில் வதியும் மக்களின் குடியிருப்புக்கள் பலவற்றில் வெள்ளம் உட்புகுந்துள்ளமையின் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் பெருமளவான குடிசைகள் இடிந்து வீழ்ந்துள்ளது. புதுக்குடியிருப்பு- இரணைப்பாலை வீதியில் வீதிக்குக் குறுக்காக வெள்ளம் பாய்ந்து ஓடுவதால் வீதி அரிக்கப் பட்டு பாரிய குழிகள் ஏற்பட்டு போக்குவரத்து துண்டிக்கப் பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லவில்லை. புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

வெள்ளம் தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்புக்குள் நிற்பதால் மக்கள் பெரும் அவலநிலைகளை எதிர் நோக்கியுள்ளனர். சில வீதிகளுக்கு குறுக்காக மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

புதுக்குடியிருப்பில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக அம்பலவன்பொக்கணை, மாத்தளன் வலையன் மடத்துக்கான போக்குவரவு முற்றாகத் துண்டிக்கப் பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் படகுகள் மூலமே பிரயாணம் செய்கின்றனர். பலர் கிராமங்களை விட்டு வெளியேறியுள்ளனர். படகுச் சேவையை கடற்புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

சுமார் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

பல குடிசைகள் நீரில் மூழ்கியுள்ளன. இதேவேளை இப்பகுதியில் காவல்துறை பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். (லோ.தீ,சோ,08)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.